
ஸ்ரீ
ஸ்ரீவெங்கடேசாயநம.



# திருப்பதி வெங்டேஸ்வரர்
# தேர்வண்டிக்கால்
# சரித்திரம்.

இஃது,
குன்றத்தூர் பெரியணயக்கவிஞ்சர்
குமாரர்
சுப்புராயஅய்யர் இயற்றியது.

சென்னை சூளை,
முருகப்பசெட்டியார்
அவர்களாற்றமது,
தனலக்ஷ்மிநிர்த்தன அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1907.

(இதன் விலை) (அணா-4



விஜயமங்கலம் நாரணையப்பர்பாடிய

# சாற்றுக்கவி

விருத்தம்.

நலமிகுஞ்சுக்குலச் சம்வச்சரம் புரட்டாசி
நற்றேதிமூன்று
நளினமிகுசுக்கிரவா ரந்துவாதேசியும்
நன்குதிருவோணமதிலே
அலர்மேலுமங்காச மெதனிரத்ததினுரு
ளானவண்டிச்சரித்திர
மதாகன்னடத்திலே முதியோருரைத்ததை
அம்புவியெலாமறியவே
குலமதிலுயர்ந்தவன் குன்றைமானகருளோன்
கோதிலாவெஜுர்வேதியன்
குணமிகுமகட்சுமினா ரணபூசுரன்றரு
குமாரன் சுப்ராயவையன்
நிலைபெறவேஹரிபஜன கீர்த்தனமெனப்பாடி
லெக்ஷ்மிநா ரணதேவர்முன்
நெடுநிலமெலாம்புகழ வேயறங்கேற்றினர்
நீடூழிவாழியென்றே.

திருப்பதியில் அறங்கேற்றியபோதுபாடிய

## சாற்றுக்கவி.

ஆசிரியவிருத்தம்.

இஃது,

குன்றத்தூர் பெரியணக்கவிஞர் குமாரர்
சுப்புராயஅய்யர் இயற்றியது

சீர்கொண்டகலியுகசகாப்த்தம நாலாயிரஞ்
சேருந் தொளாயிரத்திற்
செப்புமெழுபத்தொன்ற கதிலேசுக்குலவருட
ஜயமிகு மடந்தைமாதம்

பேர்கொண்ட முப்பதாங் தேதிகுருவாரம்
மிரங்கு தசமித்தினத்தில்
பிரசன்னவேங்கடரமணசுவாமி சன்னிதியிலே
பெருஜீயரனுமதியிலே
பார்கொண்ட கொங்கிற் குறுப்புள்ளநாட்டிலே
பண்புகுண்றுபுறம்வாழ்
பன்னுமெசர் வேதியன் சுப்ரயபாரதிதன்
பாக்கியவிசேஷத்தினாற்
நேர்கொண்டவண்டிச்சரித்திரக்காதையைத்
தீந்தமிட் கீர்த்தனமதாய்ச்
செய்தரங்கேற்றினார் ஸ்ரீனிவாசன்கிருபை:
சிறந்து மிகவாழி யென்றே.

—:(*):—



ஸ்ரீவேங்கடேசாயநம:
நிர்விக்னமஸ்து.
பாயிரம்.

# திருப்பதிவேங்கடேசுவரர்
# தேர்வண்டிக்கால் சரித்திரம்.

## விக்கினேசுவரத் தோத்திரம்.
### ஆசிரிய விருத்தம்.

அம்புவியிலேசகலசம்பிரமமிகுத்திடும் அழகுமிகுபாகநகரம்
அதிலேஒருபிராமணப்பதிவிரதைதனமர்ந்தனில்லாமலரிரைத்துதித்தேன்
கும்பிதனிலொருசுதனையீன்றிடுவனாகிலக் குமாரனைத்தேவர்வண்டியிற்
கொற்றவாய்தருகிறேன்பெற்றவளிவளென்று குவலயஞ்சொல்லவைப்
அம்புயக்கண்ணனேதிருவேங்கடசனே ஆதியேயென்றுவேண்ட(பாய்
ஹரியதுவரந்தந்து சிறுவனைத்தேர்வண்டி யடியிலிட்டதின்மேல்வருங்
கம்பீரமானகதை யைப்பாகவதர்பஜனை கீர்த்தனமெனப்பாடவே
கேசவன்கீர்த்திவிசு வாசமங்களகரக் கணபதிபதந்தொழுததே.

தரு-இராகம்-உசேனி தாளம் அடதாளசாப்பு.

பல்லவி.

கணபதினீயே எனக்குப் பக்கத்துணைவருவாயே.

அநுபல்லவி.

பணங்கொண்ட அரவக்கங்கணம் பெருந்தூயவே
கணங்கொண்டதேவர் சரணந்தொழுநேயனே. (கணபதி)

சரணங்கள்.

1. மோதகதரனேமூலாதார மூர்த்தியைங்கரனே
நீதம்விழையுஞ்சதுர் வேதம்பரவியலம்
போதரவுனையன்றி யாதரவெவர்சொல்லும். (கணபதி)

2. சாமரகர்ணமுக்கண்ண சரச்சசிவர்ண
தேமுக்கனிகரும்புந் தேங்காயதிரசமே
தாமெத்தவும்விரும்புந் தழைக்குமதகசமே. (கணபதி)

3. அருகணிகிலாகுன்றையகி லாம்பிகைபாலா
தரணிபுகழுமரதச் சக்கிரச்சரிதஞ்சொல்லக்
கருணைகொடுத்து-முற்றுங் காத்துரக்ஷியும்நல்லக். (கணபதி

## ஆழ்வார் தோத்திரம்,

### 2. விருத்தம்.

கருகூரம்புயமேனிகண்ணபிரான் றிருவடியைக்கருதிப்பாடத்
திருகூர்வெஞ்சிந்தையினேன் றீவினையேன் ஜகவாரியினல்லோலச்
சருகூரென்னும்படியேதத்தளிக்குந்தமியேஞ் சஞ்சலந்தீர்தாளுங்
குருகூராழ்வாருபயக்கோலபதாம்புய மலரைக்கும்பிட்டேனே.

2. தரு இராகம் பைரவி தாளம் ரூபகசாப்பு.

பல்லவி.

ஆழ்வார்திரு வடிகளேசரணம் சடகோபனம்
மாழ்வார்திரு வடிகளேசரணம்.

அநுபல்லவி.

ஆழ்வாரடி-தாழ்வார்களை-யாழ்வார்வெகு-வாழ்வாகவே (ஆழ்)
1. அதிசுந்திர மதிசந்திர நிதிமந்திர யதியிந்திர (ஆழ்)
2. ஒருநூலாயிரமாகிய திருவாழ்மொழிக் குருவாகிய (ஆழ்)
3. சதமாயரி பதமுண்டென இதரத்துள மதகண்டன (ஆழ்)
4. திடமாயரி யிடமேவுதற் கிடமாகிய சடகோபனம். (ஆழ்)

## சரஸ்வதி தோத்திரம்.

### 3. கலித்துறை.

வெள்ளைக்கலைச்சி விதினுவிடத்திநன்வெண்கமலக்
கிள்ளைக்கரத்திகீதாமிருகத்தி கிளிமொழிச்சி
எள்ளத்தனையுமிடராமல்வாக்கு யினிக்கவேயென்
உள்ளத்திருந்து உதவிசெய்வாளையா முத்தமியே.

தரு-இராகம்-தோடி-தாளம்-ஆதி,

பல்லவி.

தாயேதனயனுக்கருள் தருவாய் சரசிருகமதில் வளர்
தாயேதனயனுக்கருள் தருவாய்.

அநுபல்லவி.

ஆயுமறையவன்றன் வாயில்வளர்கிதியே
நாயேன்சொல்லுங்கவிக்குட் டோயுஞ்சரஸ்வதியே. (தாயே)

சரணங்கள்.

1. வாணிமதுரமிகுஞ்சொல்வாணி வனஜாஸனன்மருவிய
ராணிநளினிநித்தியகல் யாணி
ஆணிமுத்தினப்பணி பூணிபுஸ்தகசுக பாணிவீணிபணி
வேணிதிராணிமிகுந் (தாயே)

2. ஏழுமலையவன்சரித்திரத்தை அடியேன்பஜனைகள்செய்து
நாளுந்துதிக்க நல்குவைவாத்தை
வீரமௌனும்விழிமயி லாளேயுனதுதிருத்
தாளெஞ்சரணமெந்த வேளையிலுங்கிருபைசெய். (தாயே)
3. ஆறுமுகக்குமரனையடுத்தாய் அரன்செவிபிற்பிரணவத்தைக்
கூறும்படியருள் மிகக்கொடுத்தாய்
ஆரணியெனும்பரிபூரணியுனதிட காரணம்புகலுமுன்
காரணம் நீயெந்தன் (தாயே)

## அகிலாம்பிகை துதி.

### 4. விருத்தம்.

செந்திருவளர்மார்பன் திருப்பதிவேங்கடேசன்
வந்தநல்லிரதவண்டி மகத்துவக்கதையைப்பாடச்
சந்ததம்மதுரவாக்குத் தப்பாமற்கொடுத்துரக்ஷி
சுந்தரிகுன்றையூரிற் றுலங்ககிலாம்புநீயே.

### 4. தரு இராகம் மத்திரமாவதி தாளம் அடசாட்பு

பல்லவி.

அம்பாகிருபைசெய்குவாய் அகிலஜலக
தம்பாகிருபைசெய்குவாய்.

அநுபல்லவி.

வம்பார்முலையிலே குண்டபுரியீசன்
வாமியெனும்பிராமிகிருபைசெயம் மேனமிநீசிவகாமிசுந்தரி (அம்)

சரணங்கள்.

1. வேதாகமவடிவே சச்சிதானந்த போதஞானமுடிவே
பூதபௌதிகனுறு பேதவுபிரைப்பெற்ற
பிணிதையடிவர் மனதில்நடமிடு
வனஜபதயுகவனிதை யெனுங்கிருபுர(அம்பா)
2. ஆதிபருசத்தியே பிரமானந்த
சோதிவடிவத்தியே பாதிமதிஞாத லோதிமமேகல்விப்
பாக்கியங்களைத் தேக்கியெனதிட வாக்கில்மதுரம
தாக்கிகிருபைபுரி (அம்பா)
3. மஞ்சார்குழல்மயிலே பஞ்சாக்ஷரப்
பஞ்சாம்வாழ்குயிலே நஞ்சாற்மிடற்றரன்கொஞ்சுங்கிளியே
திவ்ய நளினநூபுர சரணமிருகசுடர
கருணசாகரதருண திருபுவன (அம்பா)

5. விருத்தம்.

சுப்பிரமண்ணியர்துதி.

மருமலர்த்துளவமாயன் வளர்திருவெங்கடேசன்
வருமிரதத்தின்வண்டி மகத்துவக்கதையைப்பாடக்
குருமுனிக்குபதேசித்த குமரசற்குருபிலேயெந்தன்
அருகில்வந்துதவிசெய்து அனுதினங்காக்கவென்றே.

5-தரு-இராகம் காம்போதி தாளம் ஆதி,

பல்லவி.

வேலுமயிலனெக் காலுந்துணைசெய்யவே-அதி
வீரதீரவடி வேலுமயிலனெக் காலுந்துணைசெய்யவே,

அனுபல்லவி

ஆலமருந்துந்திரி சூலன்செவியினின்
மேலும்பிரணவந்தன் ஞலேயருள்வடி. (வேலு)

சரணங்கள்.

1. ஆறுமுகமுமீரறுபுயமுமுடையோன் அமராடியவசுரரை
வேருகளைந்துடுகம்பீர ஜயமுடையோன்
பாரமிகுந்திடு ஆரமருவுமோய்
யாரன்மதுரையில் மாரனெனவந்த (வேலு)

2. தூயரவர்க்குசகாயஞ்செய்புமுருகன் துளவொடுகவுஸ்துபமணி
மாயன்றனக்கதி னேயமிகுமருகன்
சேயனவன்காங் கேயன்கரார்த்தி
கேயன்பத்தரசகாயன் ஒளிர்விடு (வேலு)

3. பூமிபுகழ்சிவ காமிதருகுகனே புரந்தானருள்குஞ்சரி
வாமியொடுசுரமாமகள் மணமகனே
ப்ரேமையொடுவந்து க்ஷேமங்கொடுத்தருள்
னேமன்கடப்பையந் தாமன்சுந்தர(வேலு)

ஆஞ்சனேயர்துதி.

(6) விருத்தம்.

அஞ்சனைபாலனாகி யதிபலபீமனாகி
முஞ்செய்ராமாயணத்தும்மொழியும் பாரதத்தும் வந்து
கஞ்சநற்பதவிமீவண்டுங் கருணைமாருதியைப்போற்றி
இஞ்சொலாலிதேர்வண்டிச் சரித்திரியம்பினேனே

(9) தரு-இராகம்-கலியாணி-தாளம்-அடதாளசாப்பு.

பல்லவி.

நீயே துணைவருவாய் ஆஞ்சனேய
நீயே துணைவருவாய்

அநுபல்லவி.

நீயே துணைவருவாயே திருப்பதி
மாயன்றனக்கதி நேயமிகுந்திடும் (நீயே)

சரணங்கள்.

1. காகுத்தன் றனையடுத்தாய் சீதையைத்தேடிக்
கண்டுகையாழி கொடுத்தாய்
வேகமாகச்சஞ்சிவித் தியாகிநீயுமேதாவிப்
போகிப்பரதற்காவி ஈயுநற்சிரஞ்சீவி (நீயே)

2. பஞ்சவருடன்பிறந்தாய் பீமனெனவே
பாரோர்புகழ்ச்சிரந்தாய்
வஞ்சக்கௌரவரென்னும் பஞ்சைப்பரக்கவிட்ட
மிஞ்சும்பல மாருதி தஞ்சநகிருபைவாரிதி (நீயே)

3. தோத்திரஞ்சொல்லவறியேன் உன்கருணைக்கு
ஆத்திரமுள்ள சிறியேன்
கீர்த்திமாநவும்வேங்க டாத்திரிவளரும்நல்ல
மூர்த்திரதச்சகிரத்தின் கீர்த்திகதையைச்சொல்ல (நீயே)

## லட்சுமீ நாராயணசுவாமி துதி.

(7) விருத்தம்.

அச்சுதன்வேங்கடேச ரனுக்கிரகமதனைப்பாரி
லுச்சிதமாகக்காட்டு முருட்சரிதைத்தைப்பாடக்
கச்சணிமுலைப்பொன்மாதைக் கையுறத்தழுவிவாழும்
லக்ஷ்மிநாரணர்பொற்பாதம் நேசித்தேன்பூசித்தேனே.

(7) தரு-இராகம்-சங்கராபரணம்-தா-அ-சாப்பு.

பல்லவி.

நாராயணவுன்னைநம்பினேன்
கோரதுரிதபரி ஹாரவாதலக்ஷ்மீ (நாராயண)

அநுபல்லவி.

காரார்நிறக்கொள் சரீராவுயர்குன்றை
யூராதுளவணி மாரார்தலக்ஷ்மீ (நாராயண)

சரணங்கள்.

1. ஆலிலைதனிற்படுத்தோனே துரோபதைவேண்ட
அக்ஷயத்துகில்கொடுத் தோனே
ஞாலமதனையொரு காலினாலேயளந்த
சீலவாமனவனு கூலராமவைகுந்த(நாரா)

2. கல்லைப்பெண்ணாக்கிய காலனே பாண்டவரைக்
கரத்துரக்ஷித்தகோ பாலனே
பல்லுயிர்க்குயிராயே பரமஆத்துமாநீயே
கல்வியைத்தருவாயே கருணாநிதியேலட்சுமீ (நாரா)

3. பக்ஷிவாகனப்பத்ம நாதினெகுன்றுபுரி
பாக்கியமடையுஞ்சொரூபனே
மச்சாவதாரகின வளர்வேதோத்தாரனே
மதகஜவரதனே மாரஜனகலட்சுமீ(நாரா)

## ஸ்தலவிசேஷம்.

(8) விருத்தம்.

பூமகளுலவுமார்பன் புகழ்திருவேங்கடேசன்
ஞூமுருதகதின்வண்டிச் சரித்திரந்தமிழாற்செய்ய
நேமமோரிடதனசேவை னேர்ந்ததெல்பாக்கியமென்று
ஸ்வாமிபுஷ்கரணிசான்றன் றகப்புகளசாறறினேனே.

(8) தரு-இராகம்-கேதாரகௌளம்-தாளம்-அடதாளசாப்பு.

பல்லவி.

கண்டேன்கண்டேனே வேங்கடேசனைக்
கண்டேன்கண்டேனே ஆனந்தங்கொண்டேன்கொண்டேனே.

அநுபல்லவி.

கண்டேனலர்மேலு மங்கைசமேதனைக்
கண்டேன் பக்தர்கூக் கருணாப்பிரசாதனைக் (கண்டே)

சரணங்கள்.

1. கோவிந்தராஜர்பட் டணம்வந்துகூடியே
கூருமநரசிம்ம தீர்த்தத்தி லாடியே
கோவிந்தராஜரைக் கும்பிட்டுச்சூடியேக்
கொடுத்தபிபி நாச்சி யாரைக்கொண்டாடியே
கோசலனையருள்பாலனே லட்சுமணனைக்
கோரியவடிவேலனே யருள்கபில
ஈசத்திரிசூலனைப் பாலபிஷேகம்
யென்றுஞ்செய்யனுகூலனை வணங்கியே

கோதிலாச்சதுர் வேதமோதிய வாதிமறையவ ரோதுமந்திர
மீதுசிந்தைதனைவைத் தோதுகபிலத் தியாதிமிகுபுனல்மீதிலாடியே.

2. சேஷகிரிமுதலிற் றேவர்சரணம்ரண்டு
திரமாங்காளிகோபுரத் தேங்காயுடைத்ததுண்டு
பாஷிங்கனரசிம்ம சாமியொருவருண்டு
பாதையிலேயேழு பர்வதமுடிவுண்டு
செம்பொன்விமானங்கண்டு மண்டபம்பொன்னிற்
செய்ததெத்தலத்திலுண்டு கோபுரவாசல்
அம்பொற்படியுந்திரண்டு நின்றிடுஸ்தம்பம்
ஆனதுஞ்செம்பொன்கொண்டு விளங்கிடுஞ்

செழிக்கும் ஆதிவராக தீர்த்தமும் ஸ்வாமி புஷ்கரணியென்னுந்தீர்த்தமும, அழுக்கறும்புனல் ஐவர் தீர்த்தமும அனந்த தீர்த்தங்கள் ஹரிதன்பாதத்திற்.

3. கோவிந்தாவெனச்சொல்லிக் கூறுமணியினுதங்
குறிப்பில்வந்தவாக்கெல்லாங் கொடுப்பர்ஹரிதன்பாதஞ்
சேவைசெய்தவர்பலஞ் செப்பவெளிதோவேதஞ்
சென்மசாபல்லியந் தீர்த்தமும்பிரசாதங்
கோடிபூஷணமகித்தமும் சாளிக்கிராமங்
குல்லியாரமுஞ்சுத்தமும் சங்குசக்கிரஞ்
சூட்டுங்கரபிரசுத்தமும் அபயமொடு
சொல்லும்வரதஹஸ்தமும் ரத்னகிரீடக்

குண்டலனை முகமண்டலப்பிர சண்டமிகுகோதண்டமருவிய கொண்டல் வண்ணனை மண்டபத்தில் வைகுண்ட மென் நிலைகொண்ட மூர்த்தியைக் (கண்டேன்)

4. ஆதிவராகனையன்புடன் றெரிசித்து
அப்பால்ஸ்ரீநிவாச ரனுஞ்ஞைகொண்டுருசித்து
ஸ்ரீதாகாணிக்கைகெசத்தியே அர்ச்சித்து
தீபாராதனைச்சேவைசெய்து ஸ்பரிசித்து
தீர்த்தங்கொடுக்கபெற்றேனே திருவடியெள
சென்னிக்கணியலுயற்றேனே ஹரி ஹரியென்று
கீரத்தனஞ்செய்யகற்றேனே யெனைப்பிடித்தக்
கிலேசம்போய்சுகமுற்றேனே பருவதம்விட்டு

அழகுமிகும் அலர்மேலுமங்கா அன்னையடிதொழு தென்னையருளிய துளபமணி வெங்கடேச ஸ்ரீஹரிதுணை வியாகிலாய்ப்பிகையை யூர்வந்து.

## லக்ஷிமி தோத்திரம்.

(9) வெண்பா.

கண்டமுதம்பால்பழமாங் கவிமழையைப்பொழியுமொரு
கொண்டலகிலாம்பிகையைக் கும்பிட்டேயண்டர்தொழுந்
திருவேங்கடேச்சுரனைச் செந்தமிழாற்பஜனிக்கத்
திருமகளையே துதிசெய்வேன்.

(9)-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்-சாப்பு.

பல்லவி.

லக்ஷ்மீவுனை நம்பினேன் சந்ததம்வித்தியா
லக்ஷ்மீவுனை நம்பினேன்.

அநுபல்லவி.

லக்ஷ்மீவுனை நம்பினேன் நித்தியமெனவுஞ்ஞனெ
பக்ஷிவாஹனன்மானெ பாக்கியமிருந்தேனெ. லக்ஷ்மீ

சரணங்கள்.

1. ஸ்ரீ தக்ஷ்மீ ஜயலக்ஷ்மீ தேஜொர்லக்ஷண லக்ஷ்மீ
பூலக்ஷ்மீ புஜயலக்ஷ்மீ புத்திரபாக்கியலக்ஷ்மீ-லக்ஷ்மீ

2. கோலக்ஷ்மீ குணலக்ஷ்மீ கொடுக்குந்தருமலக்ஷ்மீ
மாலக்ஷ்மீ வரலக்ஷ்மீ வாக்கில்வளரும்-லக்ஷ்மீ

3. சேஷ்கிரீசனைத் தினமும்மருவும் லக்ஷ்மீ
தாசன்சுப்பராயன் தமிழ்க்கருளும-லக்ஷ்மீ

## மனதை யுபசரித்தல்.

(10) விருத்தம்.

ஹரிபஜனையைநீசெய்து ஹரிகிருபைபெறுவையாகில்
திருமகளுலவுமிந்தச் செகந்தனுக்கரசனாகித்
தருமமேமுதலாயுள்ள சதுர்விதபலமும் பெற்றுப்
பரமபாகவதாள்போலப் பாக்கியமடைவாய்நெஞ்சே.

(10)-தரு-ராகம்-யமுனாகல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

பஜனைசெய்மனமே பஜனைசெய்வாயரி
பரமபுருஷனை நீபஜனைசெய்வாய்.

அநுபல்லவி.

பஜனைசெய்மனமே பஜனைசெய்வாய்ஹரி
பக்தவற்சலனைப் பஜனைசெய்வாய்
பஜனைசெய்மனமே பஜனைசெய்வாய்ஹரி
பாற்கடல்சயனைப் பஜனைசெய்வாய. பஜனை

சரணங்கள்.

1. ஸுஜனோத்தாரனைப் பஜனைசெய்வாய்நீ
துஷ்டசம்மாரனைப் பஜனைசெய்வாய்நீ
கெஜவரதனைநீ பஜனைசெய்வாய்நீ
கௌரிதமயனைப் பஜனைசெய்வாய்-பஜனை

2. நந்தகுமாரனைப் பஜனைசெய்வாய்நீ
நவனீதசோரனைய பஜனைசெய்வாய்
கந்தரதேகனைப் பஜனைசெய்வாய்
கமலவைபோகனைப் பஜனைசெய்வாய்-பஜனை

3. சேஷகிரீசனைப் பஜனைசெய்வாய்நீ
திருப்பதிவாசனைப் பஜனைசெய்வாய்
பாஷ்யநரசிம்மனைப் பஜனைசெய்வாய்பஞ்ச
பாண்டவமித்திரனைப் பஜனைசெய்வாய்-பஜனை

சந்தான கோபால கிருஷ்ணர் துதி.

(11)-தரு-இ-ம்-ச-ம்-தாளம்-அட-சாப்பு.

பல்லவி.

கிருஷ்ணமிருகம் புஜி மானஸெ கோபால ஸ்ரீ கிருஷ்ண

அநுபல்லவி.

கிருஷ்ணமிருதம் புஜித்திட்டால்பவப்பிணி
விட்டுவிலக்கிச்சுக நிஷ்டைபெற்றிடுவாய்நீ (கிரு)

1. காமாதியில்முழுகாதே முழுகியே
பாமரனையபூகா தே
ராமா துளசியந் தாமாரவிகுல
சோமா ஆயிரநாமாவெனச் சொலவி(கிரு)

2. ஆசாரத்தைமறக்காதே மறைத்தரி
பூஜாவிதிகுறைக் காதே
சேஷயனஸ்ரீனி வாஸதாமோதர
கேசவஹரிகம லாஸனபூஜித (கிரு)

3. தேவாதிகட்கனுகூலனை நிசாசர
மாபாவிகள்குபூகா ளனைப்
பூவால்வடிதமிழ்ப் பாவாவாநுசிதது
நாவால்ஸ்ரீட்தம னுபாவெனச்சொலவி(கிரு)

4. கோகுலம்வளர்த்தகோபாலனை சதாதியான
பாகவதர்க்கனு கூலனை
வாகுமிகுமகோபி மார்களோமருவிய
ரோகிணிநினநீல மேகசொரூபஸ்ரீ(கிரு)

கதைப்புகட்சி.

(12) தரு இராகம் தன்னியாசி தாளம் ஆதி.

பல்லவி.

ஹரிரதசக்கிர சரித்திரக் கதையே
அமுதமாம் ஸமதையே

அநுபல்லவி.

பருவதம் சேஷாசலமது பாரும்
பாற்கடல்சாம்புஷ் காணியைத்தேருப் (ஹரிரத)

சரணங்கள்.

1. தரிதிருப்பதியே சரிவளமாம்பூ
தலப்பெருமையே தாம்பூ
கருசன்மாகவே தாசரும்ராஜரும்
கவடந்துயெடுப்பதுண்டு காரணமதுகண்டு (ஹரிரத)

2. அந்தவமுதில்னிதனு சிந்தையில்லாலவரே
அதற்பிறந்திடும விஷமாம்
அந்தவிடத்தினையஞ் சிந்தவிடாமலே
அரன்கொண்டதும் ஹருஸமாய் (ஹரிரத)

3. அமுதைத்திருடும் அசுரனைப்பொ லரிவைசுதன்
அடையிலரிவரிக்கண் றுரைத்தான்
சுமந்துப்பெத்துப் பின்மவந்தா ளவள்மேற்றேர்
தூண்டியரி யவனையாண்டிடு வதுனேர் (ஹரிரத)

4. ஸ்ரீனிவாச ரோஹிணி கிருபைக்கரத்தால்
சிருஜகவி புதர்பெருவார்
ஆனந்தமுடனந்த வமுதத்தையுண்டார
அரசாயவரே ஹரிரதங் கண்டார் (ஹரிரத)

ஸ்ரீனிவாசர் துதி.

(11) விருத்தம்.

ஞானமுமறியேனுன்னை நவின்றிட வறியேன்ருக
கானமுமறியேனுந்தன் கனகப்பொழிப்பறியேன்சொல்வி
தானமுமறியேன் யான்சொற்றமிட்பிழை யறியேனையா
ஸ்ரீனிவாஸனெனீயெந்தன் சித்தமேகுடிகொள்ளவாயே.

கங-தரு-இ-ம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஸ்ரீனிவாஸா நீயே உனைத்துதிக்க
ஞானம் அருள்வாயே.

அநுபல்லவி.

தீனரக்ஷக அஞ்ஞானபக்ஷகனே. (ஸ்ரீனிவாஸ)

சரணங்கள்

க. நீலமேக தேகா ரந்தாரவைகிபாகா
ஆலின்மீதுசிறு பாலனுகிவளர சீனவேணுகோ
பாலகிருஷ்ணரெனுந் (ஸ்ரீனிவா)

உ. காளிகோபரவனே பாஷிய கர்த்தரென்கிறவனே
ஆழியெடுத்தவனே ஆழிபடுத்தவனே
ஆழிவிடுத்திலங்கை யாழிதடுத்தவனே (ஸ்ரீனிவா)

ங. பானுகோலிதேஜா திருப்பதி பிரசன்னவேங்கடராஜா
ஆனைகூவுமுறை தானெகேட்டுவந்
தோனேயன்பர்பெரு மானெயின்பமிகு (ஸ்ரீனிவா)

அவையடக்கம்.

கஉ-விருத்தம்,

படித்துளபுலவர்முன்னும் பரமபாகவதர்முன்னும்
கடித்திடுமடியார்முன்னும் நாயினேன் புன்சொலாலே
வடித்திடுதமிழால்வண்டி மகத்துவக்கதையைப்பாடல்
நடித்திடுமயில்முன்கோழி நடிப்பதற்றுவமையாமே.

(கச) தரு-இ-ம-பைரவி-தாளம்-அடதாளசாப்பு.

பல்லவி.

குற்றமே திருந்தாலும் உத்தமர்கள் திருத்திச்
சுற்றஞ்செய்திட வேண்டுமே.

அநுபல்லவி.

கர்த்தன் வேங்கடேசனை பித்தியந்துதிபண்ணும்
பத்தியால் நான்சொன்ன பனுவலதனிலேயென்ன குற்ற

சரணங்கள்

க, வேதபுராணங்க ளோதியறிந்ததில்லை
வெல்லும் லக்ஷணம் ஐந்தின் சொல்லையறிந்ததில்லை
மாதவனைத்துதிக்கும மார்க்கம்அறிந்ததில்லை
வரத்திடிரைத்ததல்லால் திறத்திலுறைத்ததில்லை குற்ற

௨. விருத்தத்தியல்பறியேன் பொருந்தத்தியபறியேன்
மெசசுரம்ராகதாளத்தின் உச்சிதமுமறியேன்
பருத்தப்பதங்கள் நன்றாய் உறைத்திடவும் அறியேன்
பல்லவிசரணங்கள் சொல்லும்விதமறியேன் குற்ற

௩. ஸ்ரீனிவாசன் பதத்தைக் கியானஞ்செய்திடனே
தேவியகிலாம்பிகை நாவில்நின்றிடத்தானே
மானிலத்தோர் துதிக்கும் வண்டிக்கதையின்தேனே
மழலைப்பிள்ளைகள்போலெ யுளறினேனடியேனே குற்ற

கடு-தரு-கதாசங்கிரஹத்துவாரா.

பாயிரம்.

இ-ம்-கரகாப்பிரியா-தாளம்-ஆதி,

பல்லவி.

ஸ்ரீ

ஹரியைப் பஜனைசெய்வீர் சத்தம்
ஹரியைப் பஜனைசெய்வீர்.

அநுபல்லவி.

கரியநசனுமே முறையிடவுடனே
வினரவினில்வந்தே யருளதுதருமமூற (ஸ்ரீ ஹரி)

சரணங்கள்

க. துரோபதிதுகிலைப் பாபிகளுரியவே
கூப்பிட்டாளரியென்றோர்பேச்சே யவள்
சோபந்தணியும் பிரதாபவிசித்திரவர்னத்
துகிலொன்றக்ஷய மாச்சே (ஸ்ரீ ஹரி)

௨. இரணியகமவென் றியம்பெனக்கனகன்
எத்தனைதெண்டனைவிதித்தான் அந்தப்
பிரகலாதன்வேண்ட நரஹரிகம்பத்திலப்
பிறந்துபிரணியனைச் சதித்தாண் (ஸ்ரீ ஹரி)

௩. தந்தைமடியிலிருந்த மகனைச்சிறு
தாய்முனியத்தகப்பன் விடுத்தாண்பின்பு
அந்தசிறுவனும்மை குந்துனைநினைக்கவே
வந்துதிருவப்பட்டத்தைக் கொடுத்தான் (ஸ்ரீ ஹரி)

௪. தசமுகன்றம்பியை வகவிலக்கிடவே
தசரதராமனை யடுத்தான் அந்த
நிசிசுரர்களைக்கொன் றரசுவிபீஷணர்க்கன்று
ரகுபதியல்லவோ கொடுத்தான் (ஸ்ரீ ஹரி)

5. துஷ்டரைகொல்வான் சிஷ்டரைப்புல்வான்
குக்ஷத்தில் மோக்ஷத்தைத் தருவான் பின்னும்
அஷ்டைசுவரியமும் அவன்றரவல்லால்
ஆரினிக்கொடுத்திட வல்லார் (ஸ்ரீஹரி)

6. மச்சகூர்மவருஹநரஹரீ வாமனராமவதாரன் சீதா
லக்ஷ்மிராமன பலராமகிருஷ்ணன்
கல்கியெனுந்தசாவ தாரன். (ஸ்ரீஹரி)

7. சஙகுசக்கிரம சார்ஙகம் வாழ்சுதை
தஙகுபஞ்சாயுதபாணி நீல
பங்தலின்தேகன் மலர்மகள்போகன்
மண்மகள்மருவுமோர் பாகன் (ஸ்ரீஹரி)

8. ஆழியின்மேலும் ஆலிலைமேலும்
அறவிலும் அடியவர்மனத்தும் எவ்
வேளையும்வசிப்பன் விழிதுயில்ருசிப்பன்
வேண்டிடவருனெத்தி னத்தும் (ஸ்ரீஹரி)

9. கருடவாஹனன் கௌஸ்துவாபரணன்
கனகபீதாம்பரதாரி நல்ல
மருமிகுதுளசிமார்பன் கயிலைஸ்ரீ
வச்சன்வைகுண்ட முராரி (ஸ்ரீஹரி)

10. சேஷகிரீசன் றுருப்பல்வாசன்
ஜகத்தார்களுமுல்லாசன் ஹரி
தாசர்கள்போற்றும் வேங்கடாரமணன
தருமசொரூபன் விசுவாசன் (ஸ்ரீஹரி)

11. கலியுகவரதன் காமித பலதன்
காரணக்கதைக ளெத்தனையொ அது
சொலத்திறளதொ வாயிரனுவான்
சொலப்பல யுகங்களெத்தனையோ (ஸ்ரீஹரி)

12. ஆயினுஞ்சிறியேன் ஹரிசரித்திரமாம்
ஆழியிலங்கையினீர் போல் என்
வாயினுலரித வண்டிச்சரித்திரத்தை
மகிழ்வேன்மழலை மொழிவார்போல (ஸ்ரீஹரி)

13. ஒருவள் தன்மகன்மேல் ஹரிரதவண்டியை
ஓட்டியெழுப்புஞ் சரித்தி ரத்தைப்
புரந்தரதாசர்கண்டக் கிருதியால்
புகலுமபண்டிய சரித்திரத்தை (ஸ்ரீஹரி)

14, வளமிகுக்தமிழால் விளம்பெனப்புறியோர்
மகிழ்ந்துரைத்திடுமதினுலே யென்
னுளந்தனிலரிகிருபை வளந்திடவடியேன்
உரைத்தேன்பஜனைக்கென்றப்பாலே (ஸ்ரீஹரி)

15, வேடன்ராமராவென்றான் ஒரு அஜா
மிளனுமனுறுவென்றான் அதுபோல்
பாடினென்றமிழால் வண்டிச்சரித்திரத்தைந்
பஜனீக்கஹரிகிருபை னன்றும் (ஸ்ரீஹரி)

16, ஸ்ரீவேங்கடகிரி நாராயணஹரி
திரவியச்சரிதைக்கேளும் இந்தப்
பாரினிலெவர்க்கும் பாக்கியங்கொடுத்துப்
பதவியுங்கொடுப்பதென் னுளும் (ஸ்ரீஹரி)

16-கதாசங்கிரஹம்-துவாரு.

இ-ம்-கரகாப்பிரியா-தாளம்-ஆதி,

பல்லவி.

தேருருட்டக் கதையிதுவே கேட்டிடத்
வெகுட்டாகிதிது மதுவே.

அநுபல்லவி.

நாரிதன்மகன்மேல்த் தேரைநடத்தியகு
மாரனையெழுப்புமு ராரிதனதுதிருத் (தேருருட்)

சரணங்கள்

1. திருவளர்பாகா நகரத்திற் செழிக்குந்தேன் மொழியா ளொருமாது 2 அருவையர் காகீ இழகிலவளெஸ்ரீ அருந்ததி யவட் கினையோது 3. காக்பகோத்திரப் பூசுரன் றனதிடகாதலி யவட்கினையாரு அரிதாசருக் கனுதினம போஜன முதவுவள் தருமசீலே யவள்பேரு, மைந்தனில்லாமல் மனம்வருந்திடுவாள் வயதொரு முப்பதுமாச்ச அவள் 5. சிந்தையிலரியைத் தியானமே செய்து செப்பினள் அவருமோர் பேச்சு, 6. ஸ்ரீஹரிதேவா சின்மயரூபா திருப்பதி வெங்கடரமணு இந்தப் பாரினையளந்த பணிமலர்ச்சரணு பாக்கிய லட்சுமீரமணு 7. காமிதபலதா கரிராஜவரதா கனகபீதாம்பரதாரீ நல்ல தாமரைக்கண்ணு தருமுகில்வண்ணு சற்ஜனற்கருள் கிருபைவாரீ. 8. செந்திருமார்பா திருப்பதி வேங்கட தேவாயென் றிருவயிற்றால் ஒரு கந்தனைப்படைத்தால் உந்தேர் வண்டிக்காலுக் கிடுவனென்று நினைத்தாள் 6. புத்தெனும் பெருநாகத் தினிற்றள்ளைப் பெற்றால் போதும் உத்தமவுந் தேர்வண்டிக் கிடுகிறேன் உறுதி யிதுவென்றாள் மாது,

10. இந்தப்படியே அவள் சிந்தையில் நினைத்தே
யிருந்தனள் அவள் தன்பர்த்தா ஒரு
மைந்தன் பிறக்கிற் கனகந்தனிற் பதுமை
வளங்குவேன் ஹரிக்கெனவுரைத்தான்.

11. மாமனுமுறைப்பான் மகன்சுதன் படைத்தால்
மகிழ்வொடு வேப்பிலை தின்றே இந்தப்
பூமிபுகழுந்திருப் பதிமலைவர் துணைப்
பூசைபுரிகுவேனானென்றே.

12. மாமியும்வேண்டுவள் மருமகள் வயிற்றில்
மைந்தன் பிறப்பதே யானால
தாமரைக்கண்ணா தொட்டிலுஞ்சேயுங்
தருகிறேனென்றாள் தானாள்.

13. அவரவர்மனதினில் நினைத்ததை யெல்லாம்
ஹரியரியானோ கேளும்
இவள் கோரியதை எப்படித்தருவாள்
யென்று அறியவலை யாரும்

14. கருணைசெய் தவளிட திருவயிரதனிற்
கருப்பந்தரிக்க அவள் கண்டால்
தருமசீலையும் ஒருபதுதிங்களிற்
றனையனைப் பெற்றெடுத்துக் கொண்டாள்.

15. ஜாதிமரபின்படி வேதியர்க் கெல்லால்
தானம்பலவுந் தந்தாகள்
வேதங்களோதியே ஜாதகர்மாதிகள்
விதிவழியேபுரிந் தார்சள்.

16. செந்திருமார்பன் றிருவருளதனால்
செனித்த சிறுவனுகருப் பேரு
அந்தணருரையால்ஸ்ரீவேங்கடரமணனென்
றழைத்தாரவர்களும் பாரு,

17. பத்துமாசஞ்சென்றது புதல்வனுக்கு
பிரசன்னவேங்கடகிரி வாசன்
பெத்தவள் தனதிட நித்திரைதனில் வந்து
பேசுவர்சொர்ப்பனத்தீசன்.

18. மகரமதியில் நீ மகுவரங்கேட்டாய்
மங்கையுன் மனக்குறை தீர்த்தோம்
பகருமுன்மொழிப்படித் தருவாயென்று
பாலன்வருமவழியைப் பார்த்தோம்.

19. அற்பிசிமாசத் துச்சவ ரதவண்டி
அடிக்குக் கொடுப்பா யுந்தன் சுதனே
சொற்படிப் ப்ரார்த்தனை செலுத்தெனச் சொன்னர்
சொப்பனத்திலே அச்சுதனே.

20. நி திரை தெளிந்தாள் நெடுமூச் செறிந்தாள்
நினைவுகலங்கினள் மாது
பெற்றமகனைத்தேர் வண்டிக்கிட்டு எப்படிப்
பிழைப்பேனென் றழுதாளப்போ

21. ஹரிதனைத் துதித்தாள் அருமைப்புதல்வனுக்கு
அணிபணிகளோயலங்கரித்தாள்
பிரியமுடனே அதி கருசனமாகவே
பின்னுமகனை யாதரித்தாள்.

22. ஹரியும்வருடம் ஐந்தளவிலும் பொருத்தர்
அரிவையுந்தான்மிகமறந்தாள்
ஒருமகன்றனதிருவயிறுவலிக்குமென்
றுரைத்தானவள்பராபரதரள

23. வயித்தியர்பலபேர் வந்துகைபார்த்தார்
மாத்திரையவுஷதங் கொடுத்தார்
சயித்தியமென்றூர் பயித்தியமென்றூர்
தழைக்குபிணியாறகை விடுத்தார்

24. சோதிஷர் வந்தார துற்திசையென்றூர
சுரகுரு பலமிலையென்றூர்
ஆதிநவக்கிரஹ தோஷமென்றூர்சிலர்
ஹரியைமறந்த திதுவென்றூர்

25. ஆமிதுநிஜமென் றுரைத்தார் அப்பொழு
தவரவர்பிருது சேகரித்தார
சுவாமிதிரு வேஙகட ரமண வுண்ப்ரார்த்தனை
தருகுரோமெனவுங் தோத்தரித்தார்.

26. திருப்பதியாத்திரைசெய்தார் கபிலத்
தீர்த்தத்தில் ஸ்நாநமுஞ்செய்தார்
அர்ப்புத கோவிந்த ராஜரைத் தொழுதார்
ஹரிசரணத்தைத் துதிசெய்தார்.

27. காளிகோபுரங் கண்டார்பாஷியக்
காரரைத் தெரிசித்துக்கொண்டார்
யேழுபருவதமுங் கண்டார்வேங்கட
ஈசனிருப்பிடமுங் கண்டார்.

28. சொற்னவிமானமுஞ் சொானமண்டபமும்
சொர்னக் கலசகோபுரமும்
சொர்னக் கபாடமும சொர்ன துவஜபடமும்
சொர்னசபையின் விசித்திரமும,

29. கண்டார் ஆதிவராகரை சாமிபுஷ்
கரணியதிசியத்தைக் கண்டார்
கண்டார்மணியச் சந்தனரதத்தைச்
கண்டார்ஹரிசரண் கண்டார்.

30. தாசர்கள்செயும்ஹரி கோஷத்தைக்கண்டார்
தரும மஹாந்துவைக்கண்டார்
ராஜீக ஸ்ரீனிவாசரைககண்டார்
நல்கும் உத்திரவையுங்கொண்டார்.

31. சன்னதிவந்தார் தனையனுந்தாயும்
தகப்பனும்அவனைப் பெற்றனரும்
சொற்பனப்பதுமையுந்தொட்டிறகுழவியுஞ்
சுவைமிகுவேப்பிலைத்துணரும்

32. காணிக்கைகொடுத்தார் மாமனும்மாமியுங்
கணவனும் இவர்களப்போது
வாணுதல்தரும் சீலைமகனைத்தன்
மடிவிட்டிரக்கிலை யம்மாது.

33. அருச்சனை செய்தார் ஹாரதியெடுத்தார்
ஹரிதிருச்சேவையுஞ்செய்தார்
கர்ப்புடையவளரி விருப்புடையவளாய்க்
கருணைக்கடலைத் தெண்டஞ்செய்தார்

34, தருமசீலையுந் தனையனும்பருஷனுந்
தமருமொருமடத்தில் வசித்தார்
ஹரிதிருவிசித்திர ரதமதில் வருவதை
யாருஞ்சேவித்து மனமருசித்தார்

35, மாதுமகனை ரதவண்டியடிமிற்றா
வாங்கவெஹயரிடம் பிடித்தார் அப்
போதும்சுதனைவண்டிக் கிடுகுடுகுடுவெனப்
பூசுரர்களும் வடம்பிடித்தார்

36. கோசாய் மடமுன்னால் லாசரதமும் அதிக
குருமமுடனே நின்றிடவே
தாசரும்பலபல பூசுரர்களும் அதி
தாபமுடனே நவின்றிடவே

37. ஹரியொருவர்தன்மேல் மருளதுகொடுத்தார்
அரிவையை மகனையும்பிடித்தார்
சிறுவனைஎனதிட தேர்வண்டிக்கிட்டால்
திரும்புமி ரதமெனப்படித்தார்,

38. அங்குள்ளபெரியோரவளைமுனிந்தே
அறைகுவரவரர்தானே
பங்கயகண்ணன் பிரார்த்தனைதவிர்த்தால்
பலியிடர்படுவர் மெய்தானே,

39. காசினிலீசங் காணியும்விடுக்கான்
காணிக்கைவாங்குவன் பேசி இந்த
ஸ்ரீசன்விடுவவனே திருமகன் றன்னைச்
செலுத்துவைகீயடி தோஷி,

40. என்றவசவைதார் இவள்மணவாளனும்
எங்கினநவனைப்பெற்றனரும்
இன்றிதுகேட்டோர்;என்னடிபாவீ
யென்றெழுந்தார்கள் மற்றெவரும்.

41. மைநதனைவண்டியிற் கொடுப்பாயென்றே
மறையவருறைப்பதைக கண்டான்
கந்தனுந்தாயைக் கண்ணீர் துடைத்தென்ன
காரணம்உறையென விண்டான்.

42. மைந்தனைக்கையால் வாரியெடுத்தாள்
மதிமுகத்தினில் முத்தமிட்டாள்
கந்தனீபிறந்தாலரிரதவண்டி
காலுக்கென்றதை மொழிந்திட்டாள்

43. சொன்னதைக்கேட்டான் சுதமகிழ்ந்துறைப்பான்
சுரபதிக்கெனைகொடுப்பாயே.
இன்னமும் என்போற் சுதன்பெறுவாயரி
யின்கிருபையாலே யெந்தாயே.

44. பிறப்பதும் யிறப்பதும் பேருலகோற்கே
பெருவினையது துலையாது
சிறப்புடன்ஹரிபதம்பெறப் லஜென்மத்திற்
செய்தபுண்ணியம் யிதுபோதும்.

45 யெத்தனைநாளிருந்தாலுமண்ணுலகிற்
செத்திடுவது பொய்யாது
பத்தர்கள் பனமதில் நீற்தமிடுமெரிய
தத்தையடைகுவதே போதும்

46. தாய்பெற்றிடுவார் தாரமத்திடுவார்
தனையன்பெருங்கதியைத்தாளார்
நீயெனைபடைகருமுன்னெடுமால்சதமென
நினைத்தாயுனக்கிணையாரரர்.

47. யென்றுமகனுரைத்த நன்மொழிகேட்டாள்
இருவிழியிலும் புனல்சொரிய
நின்றுகண்மணியே யென்றுபுகலுமுன்
னேரமாகுதெனப்பெரிய

48. பூசுரரடுத்தார் யேசிட்டதொடுத்தார்
பூவைமகனைக்கையிலெடுத்தாள்
ஸ்ரீசனையடுத்தாள் சிறுவனைவிடுத்தாள்
தேரடியிலேவந்து படுத்தாள்.

49. மைந்தனையிடதுசக் கரத்திற்கொடுத்தாள்
வலதுசககரத்திற்றான்படுத்தாள்
அந்தணனெடுதாய் தந்தையுமதுகண்டு
அவருமூற்சையாய்ப் படுத்தார்.

50. வலதுசக்கிரத்தினில் வனிதையும் ஹரியை
வாழ்த்துத்துதித்து வசனிப்பாள
ஜலஜனயனநின் ப்ரார்த்தனைவட்டியின்
சகிதமிதெனப் பஜனிப்பாள்.

51. மச்சவுருவெடுத்தாய் மறையினைக்கொடுத்தாய்
மறையவன்மனம் ருசித்திடவே
அச்சமில் கூர்மவதாரமதானாய்
அமுதமெவரும் புசித்திடவே.

52. ஸ்வேதவராகம் னீதானே பூமியைச்
சேஷனையாதரித்தோனே
வாதுசெயிரணியன் றானேமடியவெ
வந்தனர ஹரியென் போமே.

53. வாமனரூபத்தையெடுத்தாய் பூமியை
வாங்கிமாவலிக்கருள் கொடுத்தாய்
ராமவதாரத்தைப்பிடித்தாய் சூரிய
ராஜர்மணந்தவரைவிடுத்தாய்.

54. ஸீதாராமவதாரா கௌஸலே
தெசரதராஜகுமாரா
காதகராவணசம்மாரா பல
ராமகலப்பையணி சூரா

55. கோகுலமதிலேபிறந்தாய் பலபல
கோபிகள் புணரச் சிறந்தாய்
நாகத்துவசந்தன்னைக்கொடுத்தாய் பாண்டவர்
ராச்சியம்பெறமுடி கெடுத்தாய்.

56. கல்கியதேச அவதாரு திருவெங்
கடாசலவாசா ஸ்ரீங்காராயென்
சொற்கிரங்கி யருளுவாயெ யெனதிட
துயரைவிலக்கிரக்ஷிப்பாயே.

57. பிள்ளையைக்கொடுத்தாய் பெருமையையடைந்தேன்
பெற்றவயிருங்கொதித்திடவே
கொள்ளையடிப்பையென்று தெரிந்தாலிப்படிக்
கேருவேனோ சதித்திடவே.

58. அன்றொரு வரங்கொடுததாயே அப்படி
இன்றொரு வரங்கொடுப்பாயே
என்றுமபுகழைப் பெருவாயே மைந்தனை
யெனக்குக்கொடுத்து ரக்ஷிப்பாயே.

59. மைந்தனுடனேனுன் தான் வுனதிட
மலரடிதனிற் படுத்தேனே
இந்தரதத்தடியிற்றுனே யிடரிட
எண்ணலாமோ கனவானே.

60. தேதொழில் நடத்துந் திறமுனக்கிலையோ
தேவாயினமுங்கற் கிலேயோ
பாற்திபன் றனக்குத் தேர்நடத்தியேபரி
பாலஞ்செய்தவனும் நீ தானே.

61, மடவிபருடனே அடமதுசெய்வது
வழக்கமதுவுனக்குத்தானே
அடவியிற் பெண்களைத் துகிலைத்திருடிக்கொண்
டலையச்செய்தவனும் நீதானே

62. ஒருபதுனாறுயிரமடவாருடன்
ஓராடியவுந்தன்பேச்சை
அருமைநான்சொலலுவதெளிதோ பாகவ
தாள்சொல்லுவாரந்தப்பேச்சை

63. ப்ருகுரிஷி மனைவியைக்கொன்றவனென்றுனைப்
பேருலகோர்சொலப் பெற்றாய்
அகலிகை துரோபதைக் கருள்கொடுத்ததனால்
ஆபத்பாந்துவன் றுற்றாய்.

சுச, படைப்பாய் கொடுப்பாய்கெடுப்பாயுலகைப்
பக்ஷித்துக் குக்ஷியில் விடுப்பாய்
யெடுப்பாய் புவியைப் படுப்பாயாலீல்
யெங்குமுன் மயமென அடுப்பாய்.

சுரு, யென்மகனமேலேயிந்தரத்தைநீ
யெளிதில்நடத்துவாயரியெ
நின்மகிமை யிந்த நெடுநிலமறியவே
நிலக்கச்செய்து அருள் புரியே,

சுசு. இப்படி ஹரிதிருபொற்பதந்துதித்தாள்
எழில்வேங்கடாசல ஈசன், ஒரு
கற்பனைசெய்தார் கனகரதமகிமை
காசினியரியவுல்லாசன்.

சுஎ, தாசர்கள்பஜனைசெய்ய கோஷமும் சங்கமும்
தவில்முறசுகளிவை முழங்க
மிசுரபேரி நகாரிகள்பூரிகள்
வீணைகின்னரிகள மத்தளங்கள்.

சுஅ. நாற்றிசையிலும்பல வாத்தியமுழங்கவே
ராஜரெவருமொய்திடவே
சூஸ்திரம்பிடித்திழுத்தார்தரைபூசுரர்
சுடர்முடிரதம் பின்னிடடிடவே

சுகூ. காற்றெடுமெண்ழையிடி யாற்றதுபோலொரு
காரணங்கண்டிடகொடுத்தா
சூஸ்திரம்மறையவர் விடுத்தார் ஹரிரதம்
சுதன்மேல்நடத்திடத்தொடுத்தா

எய. மடந்தைதன் மகன்மேல் நடநதரதத்தையும்
மகிலத்தோர்களுந்துதிர்தார்
வடம்பிடி யாமலே மகரம்வரவே
மகத்துவஞ் சொல்லிக்குதிகுதித்தார்

எக. சந்தனுமெழுந்தான்காரிகையெழுந்தான்
கரிவரதனை நமஸ்கரித்தார்
அந்தணராஜர்கள்யாவருமறியவே
அவர் முதுகினிற் குரிதுரிதரித்தார்

எஉ. தருமசீலையுர்தனயனும் ஹரியைத்
தியானமே செய்கிறபோது
சிறுவன்றகப்பனையும் பாட்டனும் பாட்டியும்
தேவரெழுப்பிரைப்போது

எங. மூவரும்எழுந்தார் தேவனைப்பணிந்தார்
முருகநதனைபலவிதந்துதித்தார்
தரிவியெகுமரனைத் தழுவியேயெடுத்தார்
தாயின்குணத்தையும்ஜெமமதித்தார்

எச. அங்குள்ள பெரியோ ரனுக்கிரஹங்கொண்டார்
ஹரிதிருச் சேவையுகொண்டார்
மங்கையைப்பணிநதார மானகர்வந்தார்
மறையவர்க் கன்னங்கொடுத்துண்டார்

எரு, மங்களம ஸ்ரீவெஙகடாசலமூர்த்திக்கி
மங்களம மடவிமகனுக்கும
மங்களம் ஹரிபஜனைகள் செய்பவறகும்
மங்களம் கேட்கும சற்சனற்கும்

தேருருட்கதையிமிலே.

கஙு-வது விருத்தம்

திருப்பதிவெங்கடேசத் தேவர் தனிரதவண்டித்
திருப்பெருங் கதையைத் தானேசெழித்தகீர்த்தனமேபாடத்
தருப்புகள் தழையநீயே சந்ததங்கருணைசெய்வாய்
அருப்புத மிகுந்தவெற்றி ஐங்காமுடையசதேவே

கஎ-வது-தோடயம்-இராகம்-நாட்டை-ஜம்பை-ரூபகம்.

க, ஜயவேங்கடகிரிநாயகன் ஜயலக்ஷ்மிரமணன்மிகு
ஜயஹரிகீர்த்தனன் தமிழாற செய்து ஜெயம்பெறவே
ஜயமஙகள கௌரீசுதன் ஜயமங்கையின் குமாரன்
ஜயசங்கரி மருகனகிருபை செய்மைங்கரன் துணையே,

ஜய - ஜயா

உ. ஒருபிராம்மணி பெருமைந்தனை
உயர் வேங்கபரமணன்றுவர்
வருதோவண்டி பெரகசோரிட்வகைகீர்த்தனஞ்சொலவே-ஆ
ஹரிகேசவன் திருநாபியஞ சாசிருஹமலரோன்-பெரு
திருநாவினி லுறைவாணியெத் தினமுங்கிருபை செயவே,

ஜய - ஜயா,

ங, கருமாமுகில்திரமேவிய வண்ணன் கிருபைக்கண்ணன்
திரிவேங்கடத் தலமேன்மையைக கீர்த்தன்மாய்ச்சொலவே
அருளதகைய ஹரியின்கித ஹனுமார் கருடனுமாமின்னம்
ஹரிசேவைசெய யாழ்வார்கள் றன்னடியுந்துணைசெய்யவே,

ஜய - ஜயா

கஅ வது தரு-மங்களம்-இராகம்-கௌராட்டிரம்-தாளம்-ஆதி,

பல்லவி,

ஸ்ரீவேங்கடேசனுககு ஜயமங்களம்-எங்கள்
சேஷகிரிவாசனுககு-சுபமங்களம்ஆ ஆ ஆ ஸ்ரீ

அநுபல்லவி,

தேவாதிதேவனுக்குச் செழுமயக்மறையனுக்கு
மூவர்பரவுமஆதி மூலமென்பவனுககு (ஸ்ரீவேங்க)

க, தாமரைகண்ணனுக்கு ஜயமங்களம-அமுதைத்
த்ருமுகில் வண்ணனுக்குச் சுபமங்களம ஆஆஆஆ
பூமகள் மருவிய புண்ணியபுருஷனுககு
ஸவாமிபுஷகரணியாநதடம் வாழுஹாஷ்னுககு, (ஸ்ரீவேங்கட)

உ, ஆதிவராகனுக்குச் செயமங்களம்-ஸ்ரீனி
வாஸ அதியனுக்குச் சுபமங்களம் ஆ ஆ ஆ
கோதில்மோவித்ராஜர் கொண்டநாச்சியாருக்கும்
மாது அலர்மேல் மங்கைமனோன்மணிக்கும்-ஸ்ரீ

ங, ஜீயர்திருமொழிக்கு ஜெயமஙகளம மஹாந்தர்
சிஷ்டஅடியாருககு சுபமங்களம-ஆ-ஆ-ஆ
தாயின்மகனைத்தாண்டித் தாவித்தனனிலை நிற்கும்
மாயன்ரதத்தினபண்டி மகிமைக்கதையிதற்கும

ச, பத்தியுள்ளவருக்கு ஜயமங்களம பஜனைப்
பாடிகேட்பவருக்கு சுபமங்களம்-ஆ-ஆ-ஆ-ஆ
சத்தியகிலாம்பிகை தன்வாககுத்தழைககவும
பத்தன்சுப்பராயன்சொல் பஜனைத்தமிழ்செழிக்கவும்

ஸ்ரீவேங்கடேசனுக்கு ஜயமங்களம்,

---

பாயிரம் முற்றுப்பெற்றது,

விருத்தம்-கரு,

தருக்கள்-கஅ,

ஆ-ருக,

வேங்கடேசாயமங்களம்,

---

## வண்டிக்கால்சரித்திரம்.

க-வது-விருத்தம்,

மணிகொண்டசிகரமும் மாளிகைவிசித்திரமும்
மகரதோரணவீதியும்
மறையவர் தெருக்களும் இறையவர் தெருக்களும்
வைசியர்மற்றுளமனைகளும
அணிகொண்டதேர்வீதி யாவணங்களுமிலகு
அன்னசத்திரமளவிலா
ஆனைபரிசேனையோடு அரணவித்தாரமிகு
அழகுசெறிபாகநகரக்
கணிகொண்டதிருநகரிலொருசெதியன்மனைவி
கற்பின்மிகுதருமசீலைக்
கர்ப்பமில்லாமலவள் முப்பதாண்டளவுமே
கவலையுடனேவருந்தித்
துணிகொண்டதருமமொருமுப்பத்திரண்டையுஞ்
சோர்வுராமற்செய்திடச்
சுரர்பரவுவேங்கடேச சுரனருடருக்கதை
சொயிக்கேட்கமிகுசுகுர்தமே

க-தரு-லாவணி-இராகம்-நாதநாமக்ரியை-தாளம்-ஆதி.

பல்லவி,

கேளும்ஸுஜனர்களே யெந்த
நாளுந்தருமசீலை யாளுநசெய்யறங்களைக் — கேளும்

அநுபல்லவி,

வாளெனும் விழிமயிலாளுமனுதினமுங்
கோழிகூவு மந்த வேளைவிழித்தெழுவள். — கேளும்

சரணங்கள்,

க, பதியெழுந்திடுமெது ததிதனை — யடுப்பாள்
பணிந்து ப்ராதஸநாநமுஞ்செயக் — கொடுப்பாள்
எதுநினைந் திடினுமக் கெதிரினிற் — படைப்பாள்
இல்லிடை சமையல்செய் யியல்பனை — முடிப்பாள்
பதுமனுப னுக்குப் புதுமலரெ — டுப்பாள்
பதிகைகொடுத் தச்சாத்திடவகை — கொடுப்பாள்

அதிதிகளுடன்பதியுணவனங் கொடுப்பாள்
அன்பன்பரிகலத்திலவளுமுண் டடுப்பாள்(கேளும்)

உ. புண்ணியபுராணகதைகளில் விசுவாசி
புருடனுடனேமிருதுவாகவே பேசி
எண்ணியபகல்கழித்திடுமாக ராசி
இரவிலரியர்ச்சனைக்கியல்புசெய் தாசி
உண்ணியல்முடித்துதன்னுடையவன் யோசித்
துளதைநடத்தியவன்உறஙகப்பின் பாசி
தன்னிற்படுத்துறங்குவாள்மனங் கூசி
தான்முன்னெழுவளரிதியானத்தைப் பேசிக்(கேளும)

ங. கற்பினின்மிகு அருந்ததியிவள் தானே
கனமிகுபொறுமையிற்பூமிந்தத் தேனே
பொற்பினின்மிகுயிலசுமிமட மானே
புகழ்ப்பார்ப்பதியெனப்புகலுவார் தானே
புறப்புதக்குசமுடையவளறங் தானே
புரிந்துபுருஷனைப்பூசிப்பவள்மெய் தானே
விற்பனர்துதிசெயயும்மெல்லியை நானே
விரித்தவள்குணம்விளம்பிடத்தெரி யேனே(கேளும்)

(உ)-விருத்தம்.

இப்படித்தருமசீலை யினிதுவாழ்ந்திடுமன்னாளில
மூப்பதுவயதுமாகி முத்தியாமகப்பேரின்றிப்
பற்பலதருமமெல்லாம் பதியோடுங்கூடச்செய்த
வற்புதமதனையென்னாலதின்தளவறைகுவேனே.

(உ)-தரு-தியதை-இ-ம்-காம்போதி-அடதாளச்சாப்பு.

பல்லவி.

க, மைந்தனில்லாமல் வருந்தித்தவஞ்செய்த
மார்க்கமதைக்கேளும-இந்த
வல்லியுமந்தணனும் புண்ணியதீர்த்தம்
மகிழ்ந்தாடினார்-நாளும

உ. சிந்தைமகிழத்தெய்வஸ் தலம்யாவும்
தெரிசனஞ்செய்தார்கள்-அவர்
சீருடன் அன்னமும்வஸ்திரமசொர்ணஞ்
சிறப்புடன்பெய்-தார்கள்

௩. வண்ணானைநாவிதனைத் தர்மவேலைக்கு
வைத்துநடத்தினர்கள்-ஞ

மங்கலிமார்க்குக்கா தோலேயும்சேலேயும்
வைத்துவளர்த்தினர்கள்

ச. தண்ணீரின்பந்தல் மடங்கள்தடங்களு
சத்திரமுமவைப்பார்-வருந்
தாபிகட்கெண்ணேயுஞ் சுண்ணமுன் தூரியும்
தர்ப்பணமுங்கொடுப்பார்

ரு, ஆருமில்லாத அநாதிப்பிரேதம்
அறிந்தால்ஸமஸ்கரிப்பார்-பசு
வானதுரஞசிடக் கல்லுகள்புல்லுகள்
அங்கங்குசேகரிப்பார்

சு. ஊரிற்குழந்தைகள் கோறுஞ்சிற்றுண்டிக
ளுண்டுபண்ணிக்கொடுப்பார்-கண்
ஊனமுள்ளோர்க்குக்கண் காணமருந்துக்
ளுச்சிதமாய்கொடுப்பார்

எ. தன்மவயித்தியஞ் சிறைச்சோறுங்கன்னிகை
தானங்களுங்கொடுப்பார்-பிறர்
தந்துயர்நீக்கியே ஷன்மதத்தார்க்கன்னந்
தாமே உண்ணவிடுப்பார்,

அ, துன்மதியோர்பிடித் தாட்டும்உயிரைத்
துலேயில்விடச்செய்யுவார்-இந்தத்
தொல்லுலகோர்க்குக் குழந்தைக்கிபபாலுஞ்
சுடுகக்கொடுத்துய்யுவார்

கூ. பிள்ளையுண்டாகிப் பெருமடவாரைப்
பிரியமுடனுதரிப்பார்-ஏழைப்
பிள்ளைகளைவளாத் துள்ளம்மகிழ்ப்
பிசகாமலாதரிப்பார்

௰. வளளலெனும் வேங்கடாசலமூர்த்தி
மலரடிக்கன்புடையார்-இந்த
மண்டலந்தன்னிலேல் யில்லரமார்க்கம்
வழுவாதகன்னடையார்.

---

(கூ)-விருத்தம்

சொல்லியதருமமல்லால் ஷோடசதானமின்னும்
பலபலவிரதம்பூண்டுபரிவொடு முடித்துவாழும்
அல்லியங்குழலியாட்கே அனுக்கிரஹம்செய்யவெண்ணிச்
சொல்லியலவேங்கடேசன் செழுமறைவர்போல்வந்தார்.

(௧)-கொச்சகம்-யமுகம.

அன்னந்தடைகரனே ஆதுலனுமவநதவர்க்கு
அன்னந்தடையின்றி அளிப்பாயென்றந்தணர்சொல்லு
அன்னத்தடைநடையா ளரிந்தடிசில்புரிந்துடனே
அன்னந்தடையிவருக் ககமகிழத்தந்தாளே.

(௪)-விருத்தம்.

அருமறையவனுக்கன்னு ளன்னமேநல்கும்போது
தருமசிலேயைப்பார்த்துந்தன றனேயனுமெங்கேயென்றார்
குறையதுவல்லால்வேறு குறையிலேயென்றளப்போ
மறையவள்புஜிக்கேனென்று மறுத்திவையுரைக்கலுற்றான்.

(௩)-தரு-இ-ம்-ஆரபி-தாளம்-ஆதி

கண்ணிகள்.

௧. மைந்தனில்லாமனேயில் மறையோர்புஜிக்கமாட்டார்
மங்கையேயென்றுசொன்னர் அந்தச்
சந்திரமுகிகேட்டுத் தாமரைச்சலம்போலே
தயங்கித்தவித்து நின்றாள்

௨. தந்தேன் தண்டுலமிதைச் சமைத்துப்புஜித்திடுவீர்
சுவாமிநீரென் றுரைத்தாள்
கந்தனில்லாதவர்கள் தந்தாலெதுவும்நாங்
கைக்கொள்ளோ மென்றுரைத்தார்,

௩. ஏதுமவேண்டாமென்றீரே எளியாளுக்கொருகதி
யியம்பெனப் பணிந்தாளே
நீதில்லாதசொர்க்கம் சேயில்லார்க்கில்லேயென்றார்
தேனமொழி தணிந்தாளே.

௪, புத்தெனும்நரகத்தைப் புல்லுவர்மகவில்லாப்
பூவையாரதனலே ஒரு
தத்துமகனுகிலும் பெற்றால்நரகமில்லைத்
தையலேயதன் மேலே,

௫, நீதருந்தானத்தை வேதியர்கொள்வது
நீதம அவர்க்குததானே
ஏதுஞ்சஞ்சலம்வேண்டா ஸ்ரீதரனேப்பணிவாய்
ஈகுவர்சுதன்றனே

௯, என்றுசொல்லியேமறையாளன் சென்றபின்பு
யோகதிமை துயர் கதித்தாள்
நின்றெரிதழலுக்கு நெய்போலந்தணன்சொன்ன
நேர்மைநினைந்து கொதித்தாள்

(௫) விருத்தம்.

பொறுமையிற்பூமிக்கொப்பாள் புருடனன்மொழியைத்தப்பாள்
தருமசீலையுமப்போது சஞ்சலக்கடலிலமுழ்கி
சிறுவனிலலாமற்றுனே சிந்தையுங்கலங்கிவாடி
அரிதிருவேங்கடேச ரடிதொழுதியமபுவாளே.

(௪) தரு-இராகம முகாரி-தாளம்-அடதாளச்சாப்பு.

பல்லவி.

என்னஜன்மங்கொடுத்தாய் ஹரி ஹரி
இப்படியேன் விடுத்தாய்

அநுபல்லவி.

பன்னகமீதிற றுயிலுமுனைத்துதி பண்ணுமற்போனேனே இந்தப்
பாரினிற்பிளளையில்லாதவளென்று பலர்சொல்லுக்கானேனே

சரணங்கள்,

௧. மக்கண்மெய் தீண்டிலுடற்கின்பமெனறு
வழங்குமதனுலே மழலைபஞ்
சொற்கேட்கி லின்பஞ்செவிக்கென்றுவேதமுஞ
சொல்லுமபுவிமேலெ எனக் (கென்னஜன்மம்)

௨, அன்னத்தையுண்டு அடங்கிருகங்கொண்டு
அழுகிற்சிறந்தேனே யெனே
அன்னையெனுஞ்சுதன் றன்னைப்பெறுதவள்
ஆகிப்பிறந்தேனே எனக் (கென்னஜன்மம்)

௩. மைந்தன்பெறு வுதரந்தன்னைக்கொண்டகு
வாணுட்பெருஞ்சுமையே இந்த
மாவளப்பூமியிற் கோவளைப்பூச்சிக்கு
வாய்த்தவனேச்சுமையே எனக் (கென்னஜனமம்)

௪, கந்தனைப்பெற்றெடுக்காத கரமுங்
கசடர்பெருங்கரமே இந்தக்
காசினிதன்னிலே ஆட்டின்கழுத்திலே
காணுங்களஸ்திரமே எனக் (கென்னஜன்மம்)

௫. பாலனைப்பெற்றதைபார்த்துமகிழாத
பாவிகண்ணின்றுணையே இந்தப்
பாரில்மயிர்ச்சிறை தோறும்சிறைந்து
பரவுங்கண்ணுக்கிணையே யெனக் கென்னஜென்மம்

௬. பிள்ளைசொற்கேளாத வள்ளைச்செவித்துளை
யுள்ளதுடற்கனமே இந்தப்
பேருலகந்தனிற் சிறெலிதோண்டும்
பெருந்துளைக்கொப்பினமே எனக் கென்னஜென்மம்

௭. பாலகனில்லாத பாழுஞ்சரீரம்
பாரமாய்க்கள்ளி மரமும்வளர்ந்து
பழுக்காதபாலணையே -பூமி
படைத்தல்பழவினையே எனக் கென்னஜம்மம்

௮. மக்களில்லாத மனைக்குட்பெருஞ்செல்வம்
வாய்த்திருந்தென்னபலம் தெய்வம்
மாத்திரமில்லாத க்ஷேத்திரக்கோயில்
வளர்ந்திருந்தென்னநலம் எனக் கென்னஜன்மம்

௯. பெண்ணாப்பிறந்திந்த மண்ணினில்யாரும்
பிழைசொல்லப்பெற்றேனே
கண்ணுவினைப்பணிந்தோர்களைக்காக்கும்
கருணைமிகுத்தோனே எனக் கென்னஜன்மம்

௰. அச்சுதானந்த கோவிந்தமுகுந்தனே
அண்டர்தொழுமகேசனே திவ்ய
வக்ஷஸ்தலக்ஷ்மி வளருந்திருப்பதி
வாழும்ஸ்ரீநிவாசனே எனக் கென்னஜன்மம்

௯-விருத்தம்.

இந்தவாறழுதுவாடி யேந்திழைமனதுகூடி
அந்தணனுரையைநாடி ஹரிஹரியென்றுபாடிச்
செந்திருவளருமார்பா திருப்பதிவேங்கடேசா
சந்ததிதருவாயென்று சாற்றுவாள்போற்றுவாளே.

௫-தரு-இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபக சாப்பு. பல்லவி.

மைந்தன்பெறவரமீ தருவாயேதிரு
வளர்வேங்கிடகிரிமீதினில் வாழும்ஹரிநீயேஒரு மைந்த

அநுபல்லவி.

உந்தனையேவந்தனைசெயு மெந்தனுதரந்தனிலொரு மைந்த

சரணங்கள்.

க. தேவாவுனைநம்பினேன் பத்மநாபா கஞ்சப்
பூவாள்மருவிய கௌஸ்துவமார்பா
பூவையர்க்குள்ளே பாவியென்றென்னை
யேவிடாமலே தேவனீயொரு மைந்த

உ. மறையோர்க்கன்னந்தர தூஷிக்கிறரே
முறையோர்பலபல பாஷிக்கிறரே
தனையீந்தக்குறை தீர்த்தருள்புரிவாயரி
ஹரியேயொரு மைந்த

ங. பெற்றாரைச்சொர்க்கத்தாரென்கிறரே பிள்ளை
யற்றாரைப்பவத்தாரென்கிறரே
புத்தாம்நகரத்தாள்வதை
யற்றனெனவுற்றார் சொல்ல மைந்த

ச. யெந்தன்குறையதுதீர்த்தருளையா-வுனைச்
சந்தானகோபால னென்பதுபொய்யா
எந்தன்குலமுந்தழைத்திட
வுந்தன்பெயர் தந்தழைத்திட மைந்த

ரு. மாயாஅன்பர் தமைக்காக்குஞ்சஹாயா கனி
வாயாதிருவளர்வேங்கடராயா
சேயாகிவந் தாயர்க்கருள்
தூயாவெனைத் தாயென்றிட மைந்த

எ- விருத்தம்,

மைந்தனைப்பெற்றாளென்று மகிதலஞ்சொன்னால்போதும்
கந்தனையுந்தேர்வண்டிக் காலுக்குக்கொடுப்பேனென்று
சிந்தையில்நினைந்தாளந்த தேன்மொழிகணவன்மாமன்
நந்நரிமுகுந்தாவென்று நண்ணுவாரே.

அ - தரு-இராகம்-புன்னாகவராளி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

க. கற்புடையாள்கணவன்மற்றோர் கனிந்தரியைக் கோருங்
காரணத்தைச்சொல்லுகிறேன் காசினியீர் தேரும்
விற்பன்ன மவள்கொழுநன் வேண்டினதும் நன்றாம்
மெய்ப்புதல்வன் றனடையிற் பொற்புதல்வன் என்றான்

உ. பத்தினியாள்மாமிசொன்ன பிரார்த்தனையைக் கேளும்
பரிந்துதொட்டிற் குழவிதரப்பகர்ந்திருந்தாள் நாளும்
உத்தமனுமவள்கொழுநன் உரைத்ததும் விசித்திரம்
உண்பதின்றியாத்திரையிற் றின்பதாய்நிம்பத் பத்திரம்

௩. இந்தவிதமாகவளர் சிந்தனைசெய் திருந்தார்
இத்தனையும்வேங்கடேசன் சித்தமதிற் றெரிந்தார்
கந்தனைவண்டியிற்றரவே காரிகைதான கோருங்
கருத்தறிவோமெனஹரியுங் கருணைசெய்தார் பாரும்

(அ) விருத்தம்.

கருணைசேர்வேங்கடேசன் காரணமெவருங்காணத்
தருமசீலையுன்கரே சபதமுமறிவோமென்று
ஹரியருள்கொடுத்தாரப்போ தருவையுங்கற்பமானாள்
தெரியவேகருப்பசின்னே தெரிந்தளவியம்புவேனே.

(எ) தரு-இராகம்-கலிபாணி-அடதாளச்சாப்பு.

பல்லவி.

கெற்பம்படைத்தனளே- தருமசீலை
கெற்பம்படைத்தனளே

அநுபல்லவி.

கெற்பம்படைத்தன ளற்புதமாகிய
சற்பகிரீசன்செய் கற்பனையாகிய (கெற்பம்)

சரணங்கள்.

௧. பூத்துநீராடினளே கணவனைப் புல்லிக்கொண்டாடினளே
பாத்தொருமாதம் பகவானருளென்று
காத்திரமேதோ கனப்பது நன்றென்று
கீர்த்திமருவிய வெங்கடாசல மூர்த்தியருளெனத்
தோத்திரஞ்செய்து நாத்திகங்கையர் சாத்திரம்
வெருனேத்தியிதுமனப் பூர்த்தியெனச்சொல்லக் (கெற்பம்)

௨. மாதமிரண்டச்சுதென்பா அவளுண்ணுஞ்
சாதம் மட்டாச்சுதென்பார்
கோதில்பலக்ஷணங்களூட்டுவார்
ஆதரவாய்ரத்ன ஹாரங்கள்பூட்டுவார்
சீதமதிமுகமும்வெளுத்திட மாதமூன்றென
மாதர்வழுத்திடத்தாதிமாதொடு சூதமாடியே
போதுபோக்குவள் மாதநாலிலே (கெற்பம்)

௩. திங்களைந்தானதுவே வயிற்றிற்
சிசுவுருப்பானதுவே
மங்கையர்மங்கள மாமலர்சூட்டியே
வாருள்ளகாப்பு வளைகள்கைக்கூட்டியே

திங்களாரிலெதுங்க மேகியர்தங்கள்வேதரூ
ழங்கப்புஞ்சுவனங்கள் சிவந்தங்களிம்மட
மங்கயைர்க்குகலங்கொளச்செய் (கெற்பம்)

௬. சப்த்தமர்சம்வரவேகி சிசுவும் சகலரூபம்வரவே
மைத்தயெட்டொன்பது மாசம்வளரவே
வரும்பத்துமாசத்தில் மங்கைதளரவே
கர்த்தனுகியவெங்கடாசல உத்தமன்கிருபைசெய்து
இவள்முப்பதுவயதினை யுற்றமேலொரு
புத்திரன்றனைப் பெற்றெடுக்கவே. (கெற்பம்)

௯- விருத்தம்.

மாதமோர்பத்துஞ்சென்று மடந்தையின்வயிற்றிற்பாலன்
ஆதரவுடன்வளர்ந்து அவனியிற்செனிக்கவேதான்
வேதனைமிகவுண்டாகி மெல்லியும்மயங்கிவாடித்
தாதியருடனேசொல்லித் தயங்குவாள்மயங்குவாளே

அ-தரு-இராகம்-புன்னுகவராளி-தாளம்-ஆதி

பல்லவி

அம்மம்மாயினி யென்னசெய்வேனடி
இந்தவேதனைக்குநான் அம்மம்மாயினி

அநுபல்லவி.

அம்மம்மா பெண்ஜென்மம்பாவி
பிரமன்படைத்த வன்மமிதுவோ (அம்மம்மா)

சரணங்கள்.

க. மாதேயிதுகனவாதைதெரிந்தேனடி இதுவரையில்சுதன்பெறும்
மாதராழுவதைச் சூதென்றிருந்தேனடி
யேதுனனிதுபோதுமென்றுயரேறுதவேமுடியாது
பிரசவவேதையிது வெனவேதெரிந்தால்
நாதனிடமொரு போதுமருவேன் (அம்மம்மா)

உ. சற்றேயாகிலுஞ் சகிக்கவசமில்லையே யென்தாதிமார்களே
மெத்தைமீதிலும் வசிக்கரசமில்லையே
எத்தனைநேரஞ் செல்லுமோசத்துருப்பிள்ளை
கொல்லுமோ அத்தைநீ நிசஞ்சொல்லடி
பெத்தனுன் காண்பதல்லடி (அம்மம்மா)

௩. ஆரைச்சகித்தனியாயஞ்செய்தேனோ ஹரிஹரியென்றேதுதிப்
போரைத்தூஷணம் புரிந்துவைதேனோ
ஆரணன்அகண்டபரி பூரணன்வேங்கடகிரி
நாரணனுகியஹரி ஓரஞ்செய்வானோ ஆதரி (அம்மம்மா)

(௰) விருத்தம்.

தருமசிலையுமப்போது தனையனைப்பெறுவதற்கு
பிரசவேதனைபொருமற் பாங்கியரோடிச்சென்று
பிரியமுடன்வருத்துவந்துப் பெரியவள்தன்னைக்கூவச்
கருசனமாகவந்தக் காரிகைதான்வந்தாளே.

(௧௧) தரு இராகம் சவுராஷ்டிரம் அடதாளசாப்பு.

பல்லவி.

மருத்துவக்கிழவிவந்தாளே அந்த
மாதுபடுந்துயரேதென்றுகூற (மருத்துவ)

அநுபல்லவி.

௧. வருத்தமுடனேனடந்தோடியிங்கே
மாச்சப்படுவாள் கிட்ட வந்துறையாடி
மருத்துவஞ்செய்வனென்றுடி மூலே
வளர்ந்துடையில் விழுவதுடன்போராடி (மருத்துவ)

௨. நரைத்ததலையும் நடுநடுக்கக்கையில்
நழுவுஞ்சேலையிடையில் நடுக்கிக்கொண்டுநிக்க
இறைக்குமிருமு மூக்குமெடுக்கப்புகை
யிலைச்சுருட்குடினுத்தமெவரையும் மூடுக்க (மருத்துவ)

௩. கையிற்றடியொன்றெடுத்துதூணிவாயிற்
சடித்தபுகையிலையோர் காத்தினிற்பூணி
மெய்யுள்விளைந்திடு மூக்கோணி பிள்ளை
வேதையிலுஞ்சிரிக்க விழைப்பளகொக்காணி (மருத்துவ)

௪. பதறாதேநீயென்று அடுப்பாள்தொட்டுப்
பார்க்கிரேனிறுயென்று பாவையைத்தடுப்பாள்
அதுக்குள் ளொருவசனங் கொடுப்பாள் இது
ஆண்பிள்ளையென்றுதன் அரைச்சிலையுடுப்பாள் (மருத்துவ)

௫. இனிநீபயப்படாதேயென்பாள்வெத்
திலைபாக்குக்கிருமபெல்லாம் பிவட்குமுன்தின்பாள்

வனமூலிகையிது பாரென்பாள் அந்த
வரதவெங்கடேசனை வாழ்த்தி நீயென்பள் (மருத்துவ)

(கக) விருத்தம்.

மருத்துவக்கிழவிவந்து மங்கையைத்தேற்றும்போது
பொறுத்திடமாட்டேனென்று பூவையும்புகலத்தாச்சி
சிரித்துவுன்கணவனோடு சேர்ந்ததெப்படிநீயென்றாள்
கருப்புடையவள்சிரிக்கக் கடினமாய்நொந்ததன்றே.

(ம) தரு இராகம் செஞ்சுருட்டி தாளம் ரூபகசாப்பு.

பல்லவி.

வயிர்வலிக்குதுதாயே செய்யும்
வகையைநீசொல்லுவாயே வயிர்வலிக்குது

அநுபல்லவி.

துயர்விலக்கவந்தாயே நீயே
துணையென்னைரட்சிப்பாயே (அடிவயிர்வலிக்குது)

சரணங்கள்.

௧. மருந்திருக்குதென்றாயே அதை
மகிழ்ந்துநீ கொடுப்பாயே
சரிந்தயெந்தனுதரந்தனிலொரு
பருந்துமோழன் றிருந்திருந்தடி (வயிர்)

௨. இடைகடுக்குதுஅம்மா கண்ணுக்
கிருட்கொடுக்குது சும்மா
நடைதடுக்குது துடைகடுக்குது
படபடக்குது கிடுகிடுக்குது

௩. இனிபொறுக்கமாட்டேனே இதற்கு
யென்னசெய்குவேன் நானே
வனஜனயனன் பன்னகசயனன்
றனதுமனதுற் பனமோயெனது (வயிர்)

(கஉ) விருத்தம் யமுகம்.

தனஞ்செயனிரதம்வாய்ந்த சாரதிதனைத்தியானிக்குந்
தனஞ்செயக்குன்றானான தையல்மேற்கருணைசெய்து
தனஞ்சையாற்றந்தபாலன் றரணியிற்பிறக்கவெண்ணத்
தனஞ்செயனுதைக்கப்பிள்ளை சலத்துடன்பிறந்ததன்றே.

கக-தரு-இராகம் கரகரப்பிரியம் அடதாளச்சாப்பு.

கண்ணி.

நாமகரணம்விதித்தார் வேங்கட
ரமணனென்றெ துதித்தார்
பிராமணர்க்கன்னங்கொடுத்தார் தெக்ஷிணை
பரிந்துகொடுக்கத்தொடுத்தார்

௰௩-விருத்தம்.

வட்டிணைமுலையாள் இஷ்டமாமகனை
மட்டிலாவிலைகொள் தொட்டிலிலிட்டனளே.

௰உ-தரு இராகம் தோடி அடதாளச்சாப்பு.

பல்லவி.

தொட்டிலிலிட்டவள்பாடினாள் பாலகன்றன்னைக்
கட்டிமுத்தமிட் டாடினாள்.

அநுபல்லவி.

அஷ்டலக்ஷ்மியொத்த இஷ்டமங்கையர்சுத்தக்
கட்டிப்பொன்னிற்சமைத்த மட்டில்லாவழகுற்ற தொட்டி

க. பாலனுக்கலங்கரித்தாள் அநேகபுஷ்
பங்களைச் சேகரித்தாள்
ஆலமமுதமெனும் வேலார்விழியர்கூடிக்
கோலாகலமெ நாலாவிதமும்பாடி தொட்டி

உ. மங்கயர்பலர் கூடினார்ஜோஜோவென்று
மகிழ்ந்துமிகவும்பாடினார்
குங்குமமுங்களபங்களும் வழங்கினர்
சங்கீதமேளங்கள் சகலமுமுழக்கின தொட்டி

௩. முத்தினாரத்தியெடுத்தார் திஷ்டிசுத்தியே
முன்றிலதனிலே விடுத்தார்
கத்தன்வேங்கிடகிரி கமலனுபமுராரி
பத்தர்க்கருளும்வாரி பரமாத்துமாவைக்கோரித் தொட்டி

## லாலி.

கங- தரு-இராகம் ஆனந்தபைரவி சாப்புதாளம்.

க. லாலிவேங்கடநாயகா ஸ்ரீஹரீ
லாலிமங்களநாயகா
லாலிபக்தசகாயகா ஹரிஹரீ
லாலிகமலா ரூபகா

உ. புத்திரவரமேகொடுத்தாய் சுமந்துனுன்
பெற்றிடவும்நீ விடுத்தாய்
உத்தமனே யெனதுகுக்ஷி வருமகனே
நித்தியமும் நீயேரக்ஷி லாலி

ங. ஆலிலையிற் றுயிலுவாயே அகிலமொரு
காலிலேயளந்தநீயே
சூலிலேவளர்த்தசேயே யெனதுமுலைப்
பாலிலேவளர்த்து வாயே லாலி

ச. தாசர்களுல் லாசன்னீயே வைகுண்ட
வாச ரிஷி கேசவன்நீயே
சேஷகிரி வாசன்நீயே பக்தவிசு
வாசஸ்ரீனி வாஸன்னியே, லாலி

### கச-விருத்தம்.

பத்தினி தருமசிலை பாலனுக்கெண்ணெவார்த்து
மெத்தவே முலைப்பாலூட்டி வெதுப்புநீர் முழுக்குமாட்டி
சித்திய மலங்கரித்து னேர்மையாய் வளர்தாளப்போ
பத்துமாதமு மேயாகப் பாவையோர் கனவுகண்டாள்

### கரு-விருத்தம்.

மைந்தனைப்பெற்றுனுந்தேர் வண்டியிற்கொடுப்பேனென்று
தெந்தனமாகவேண்டிச் சிறுவனைப்பெற்றோமென்றும்
சிந்தையுமகிழ்ந்தாயிப்போ திங்களோர்பத்துமாச்சு
வந்தவற்பிசிமாசத்தேர் வண்டியிற்கொடுப்பாய்பெண்ணே

### கசு-விருத்தம்.

என்றுவேங்கடகிரீசன் இயம்பநித்திரைதெளிந்தாள்
கன்றினள்வயிற்றைக்கையாற் கசக்கினள் கரைந்துவாடி
நின்றுதன்மகனைக்கண்டு நெக்குநெக்குருகினேந்து
யின்றிச்செய்வதென்னெனேங்கினள் தேம்பினளே

கச-தரு-இ-ம்-காம்போதி-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

க. சொப்பனங்கண்டு றுயில்தெளித்தாள் நின்று
சேம்பினுள் இந்தத்
துஷ்டதெய்வந்தனை யிஷ்டஞ்செய்தே னென்று
தேம்பினுள்

உ. இப்படிச்சொப்பனஞ் செப்பிவிடா னென்று
எண்ணினுள் இனி
எப்படி யப்பனை யொப்பிப்பதென் றழுங்
கண்ணினுள்

ங. வம்பாகவேண்டி வகைமோசம்போனே னென்
றழுதாள் எனக்
குன்பாதமேதுணை உண்டென்றரியைக் கை
தொழுதாள்

ச. தும்புருநாரத ரும்பர வுஞ்
சுரேசனே இந்தத்
துஷ்டக்கோரிக் கையை
விட்டெனையாளுஞ் சர்வே சனே

ரு. பேதமை யென்பது மாதற்
கணிகல னல்லவோ அழும்
பெண்ணைக்கண்டா லெந்தப்
பேயுமிரங்குமே யல்லவோ

சு. காதலாய் வேண்டினேன் பாதகஞ் செய்யக்
கருத்துண்டோ பிள்ளைக்
காணிக்கைக் காகநல்
லாணிப்பொன் பிள்ளைக் கொறைப் புண்டோ

எ. பிள்ளைகொடுத்தென்னைக் கொள்ளையடிப்பது
தர்மமோ இந்தப்
பேதைக் கிரங்கியே
பாதுகாப்பானென் வர்மமோ

அ. கள்ளனைத்தேள் கொட்டுங் கொள்கைபோலானெனே
கர்த்தனே யென்னைக்
காருந் திப்பதி
நாரணமூர்த்திப்ர சித்தனே

கஎ-விருத்தம்.

கனவில்வந்தரியுஞ்சொன்ன காரணமதனையேதன்
னினத்தொடுசொன்னுலப்போ தேவர்களும்வைவரென்று
வனிதையும்ஹரியைப்போற்றி வந்தனஞ்செய்துவந்தாள்
கனமுளவற்பிசித்தேர் கடந்தபின்றிடங்கொண்டாளே.

கரு-தரு-இராகம-முகாரி-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

க. கனவுநமது நினைவுதானென்று
கவலைவிடுத்தாளே பெற்ற
கந்தனைக்கண்டு தரிசனங்கொண்டு
களிப்பொடெடுத்தாளே

உ. மையிட்டுப் பொட்டிட்டு வாரிமுடிந்து
மகனைமுத்தமிடுவாள் பின்பு
வாஞ்சையுடன் ரத்னக் காஞ்சனபூஷணம்
மைந்தன்கழுத் திடுவாள்

ங. காலுங்குத்தண்டை கொலுசுஞ்சதங்கை
கனத்த யிடைக்கிடுவாள் கந்தன்
மேலுக்குமேலுள்ள சாலுவைபோர்த்து
பிறலக்கணியு மிடுவாள்

ச. முத்துக்கடுக்கனும் ரத்தினத்தொங்கல்
முருகுஞ்செவிக்கிடுவாள் நெற்றி
முப்பிறைச்சுட்டியும் பற்பலபூஷண
முற்றும்நிறைத்திடுவாள்

ரு. முப்பநின்மேலெந்தன் கெற்பத்திவந்தனன்
முத்தென்னவேயெண்ணுவாள் அவள்
முப்பழம்சர்க்கரை யப்பமுந்தேனும்
முலையுங்கொடுத்துண்ணுவாள்

சு. பாலன்விளையாடுஞ் சீலத்தைக்கண்டு
பகர்கனவைமறந்தாள் ஹரி
பார்ப்போமிவளிட தாத்பரியமென்று
பதராமலே யிருந்தார்

கஅ விருத்தம்.

மைந்தன்சொல்மழலைவார்த்தை மடந்தையுங்கேட்டுநித்தஞ்
சிந்தையுமகிழ்ந்தாள்மாயன் செப்புசொப்பனமறந்தாள்
ஐந்துவற்சரம்பொருத்தா ரப்புராஹரியும்பார்த்துக்
கந்தனுக்குத்ரவியாதி கற்பித்தார்வெப்பித்தாரே.

கசு தரு இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

நொண்டித்தரு கண்ணிகள்.

க. அம்மாயெனக்கேதோ வயிர்வலி
யாகுதென்றானுயிர் போகுதென்றான்
யெம்மால்முடியாது எனைநீ
யெடுப்பையென்றான் கீழே விடுப்பையென்றான்

உ. படுப்பானெழுந் திருப்பான் அவன்வெகு
பாடுபடுவான் கூப்பாடுமிடுவான்
சிடுப்பான் முகங்கடுப்பான் அடிக்கடி
கிணுங்கிடுவான் மிணுமிணுங்கிடுவான்

ஙு. பெருங்குர லிட்டழுவான் பலபல
பிதத்திடுவான் பதை பதைத்திடுவான்
மருந்கைப் பிடியுமென்பான் இங்கே
வயிற்றிலென்பான் றன்னி தயத்திலென்பான்

ச. பசிக்குமென்றே யழுவான் பால்தயிர்
பருகான் அன்னமும் பெருகானே
இசிக்குது நரம்பென்பான் இனிபிழைப்
பில்லையென்பா னுன்பிள்ளை யல்லவென்பான்

ரு. கசச்கிவயிற்றைப் பிசைவான் வாய்விட்டுக்
கதருவன் கால்களை யுதருவனே
வசைக்குப் பிறந்தேனென்பான்
வளைத்திடுவான் பின்னுங் களைத்திடுவான்

தனநா தன தனதனநா.

(கசு) விருத்தம்.

நோயிதுபொறுக்கேனென்று நுவன்றழுபாலன்றன்னைத்
தாயெடுத்தணைத்துமோந்து தடவியேதன்னால ன
காயுமுஞ்சுக்கிற்காய கஷாயமுங்கொடுத்தாள்சும்மா
மாயனூர்மருந்தல்லாது வாங்குமோவயிற்றுநோவு

(கஎ) தரு இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

நொண்டித்தரு கண்ணிகள்.

அன்னையுந்தகப்பனுமே பாட்டனும்
அறிந்தாரவர்பொரி பொரிந்தாரே
நன்னயமாகவுமே வைத்தியரை
நாடியழைத்தார்வந்து கூடியழைத்தார்

உ. அவுஷதங் கொடுக்கலுற்றார் சுக்குத்திப்பிலி
அரைத்தமிளகதிம துரத்துடனே
எவளவோசரக்குவகை- தூதுவளை
யித்துடன்கண்டங்கத்திரீ துத்தியுடனே

ஙு. கற்கங்காஷாயங்களும் லேகியங்
கணக்கில்லாமற்கொடுத்தா ரிணக்கமில்லை
வைக்குஞ்செந்தூரங்களும் பஸ்பங்கள்
மாத்திரையுங்கொடுத்துப் பார்த்திடவே

ச. குணமில்லையெனத்தெளிந்தார் இனியிதிற்
குணமில்லையெனவவர் முணகிக்கொண்டே
பணமிகப்பறித்துக்கொண்டார்- இதுஎன்னமோ
பாவமென்றார்கிரகத்தின் கோவமென்றார்

ரு. வயித்தியர்களுமகன்றார்- சோதிட
மறையவர்களையழைத் துறையுமென்றார்
வியத்தினிற்குருவென்றார் அஷ்டம
வீட்டிற் சனியிருந்து ஆட்டுதென்றார்

சு. ரோகாதிபன்பெலத்தான்- இதர்குஷி
ரோகமென்பார்பின்பு யோகமென்பார்
ஆகாத்திசையிதென்பார்- வருஷமோர்
ஆறுக்குமேற்பட நூறுக்கென்பார்

எ. நமக்கிறஹஜபஞ்செய்வார்- நக்ஷத்திர
நாமஞ்செய்வார்ஜப ஹோமஞ்செய்வார்
அபமிருத்துசாந்திசெய்வார்- சூரியநமஸ்
காரஞ்செய்வார்பரி ஹாரஞ்செய்வார்

அ. மறையவர்ஜபத்தினிலே வயிர்வலி
வரவரபலிக்குது குறைவில்லையே
இறையவன்செயலென்றார் இதுயினி
யெங்களால்முடியாது வெங்கடகிரி

கூ. ஹரிதனைக்கோருமென்றார்- முன்னாலே
அவரனுக்கிரஹத்தி லுற்பவமாகவே
சிறுவன்செனித்ததென்றார்- தாய்தந்தை
தெரிந்தார்வேண்டின தரிந்தாரே

தனை தன தனை

(உஎ) விருத்தம்.

வெங்கடேசனைநாம்வேண்டி மெத்தவும்மறந்ததாலே
சங்கடவயிற்றுனோவு தனையனைவருத்துதென்று
துங்கமாயரிக்கிச்சொன்ன சொற்படிசேகரித்து
அங்கவர்திருப்பதிக்கி யாத்திரைபுறப்பட்டாரே.

(கூ)தரு- இராகம்-மோஹனரை-அடதாளச்சாப்பு.

பல்லவி.

யாத்திரைசெயவெழுந்தார்-திருப்பதி
யாத்திரைசெயவெழுந்தார்

அநுபல்லவி.

கீர்த்திமருவும்வேங்கடாத்திரிஹரியேவுந்தன்
பிரார்த்தனைமறந்தோமென் ருத்திரமாகவே யாத்திரை

சரணங்கள்.

க. வன்பொற்பதுமைசெய்தான் தொட்டிலுஞ்சேயம்
கையில்மாமியும்வைத் தெய்தாள்
க்ஷணத்தில்வேப்பிலைனன்றாய் மணக்கத்தின்குரவனுங்
குணத்திதருமசீலைகுசப்பாலுங்குரவனும் யாத்திரை

உ. மறையோருண்டிடவிடுத்தார் யாத்திராதானம்
மழைபொழிந்தெனக் கொடுத்தார்
விரைவாயெழுந்துகூடி வேண்டும்பொருளைத்தேடி
ஹரிஹரியெனப்பாடி யானந்தமுடனுடி. யாத்திரை

ங. பத்திமிகவுங்கொண்டாரே கோவிந்தராஜர்
பட்டணமதைக் கண்டாரே
அத்தலத்திலிருந்து ஹரியர்ச்சனைபுரிந்து
சபத்தகிரியைக்கண்டு தாமேதுதித்துக்கொண்டு யாத்திரை

## (உக) விருத்தம்-ஸ்தலவிசேஷம்.

ஸ்ரீவேங்கடாத்திரித் திருப்பதித்தலமகிமை
செப்பவெளிதோ சிறியவன்
தினகரன்முன்மின்னி திரிந்ததெனயானிது
தெரிந்தமட்டுரைசெய்குவேன்
தேவர்கள்வணங்கிடுங் கோவிந்தராஜரும்
ஸ்ரீபூமி தேவியாரும்
தேடிஹரிவைத்திடுஞ் சூடிதருஞச்சியும்
ஸ்ரீராம லட்சுமணருங்
கோபுரப்பிரகார கோயிலின்விசாலமுங்
கோசாய் மடத்தினழகுங்
கோதில்வேதியர்நாளு சாதியர்தெருக்களுங்
குறைவிலா நந்தவனமும்
வாவிகூபங்களொடு மண்டபவளங்களும்
மகரதோரணவீதியும்
மாமகளுலாவுமிவ் வளமுளதிருப்பதியே
வைகுண்டம் வைகுண்டமே.

---

* சகுசப்பால் முலைப்பால்.

## (உஉ) விருத்தம்-தீர்த்தவிசேஷம்.

கபிலமா தீர்த்தமுங் கனபிரம்மதீர்த்தமுங்
கருணைமா விஷ்ணுதீர்த்தம்
காமுருமயேச்சுரத் தீர்த்தம்வச்சிரதீர்த்தம்
கண்டிடும் வசிட்டதீர்த்தம்
கவலையதுவிலகிடுங் சங்சக்கிரத்தீர்த்தம்
கதைதீர்த்தம் பத்மதீர்த்தம்
கனநாகதீர்த்தமும் வில்வதீர்த்தம்பரசு
ராமகாருண்ணிய தீர்த்தம்
நவில்ஆராரோகணத் தீர்த்தமும்ஸ்ரீமஹா
நாராயணத் தீர்த்தமும்
நல்லபஞ்சாயுத தீர்த்தமுடனேநதியை
நல்கிடும் வருகதீர்த்தம்
திவலைபடில்முத்தியாஞ் சேஷதீர்த்தம்எனவே
செப்புபதினெண் தீர்த்தமும்
தேவர்கபிலேச்சுரன் கபிலமாரிஷிவளர்
திருப்பதியே வைகுண்டமே.

## (உங) அகவல்-கிரிவிசேஷம்.

க. ஹரிதிருச்சரணாம்புஜமலர்தொழுதே
பர்வதவளத்தைப் பகருவேன்கேளும்
உ. சேஷமாமலையுஞ் சிறப்புடனுயர்ந்த
பூசுரர்வேதப் புகழ்மிகுமலையும்
ங. செருடமாமலையுங் கீர்த்திசேர்நல்ல
அருளதுகொடுக்கும் அஞ்சனகிரியும்
ச. விருஷபமாமலையும் வேதவேதாந்த
ரசனையேமிகுந்த நாராயணகிரியும்
ரு. வேங்கடாசலமுமாய் விளங்குமோர்சைவம்
பங்குடனேழு மகிழ்ந்திடவெளிதோ
சு. மலைவளமெல்லாம் மகிழ்ந்திடவெளிதோ
சிலசிலசொல்வேன் தெரிந்தமட்டிலுமே
எ. ஆனையும்ஹரியும் அதியுறவாடும்
பூனையும்எலியும் புணர்ந்துறவாடும்
அ. மானொடுவேங்கையும் மருவியேநிற்கும்
தேனுவும்புலியுஞ் சேர்ந்துமேநிற்கும்

௯. சந்தனம்முதலாய்த் தழைத்திடுதருவும்
பைந்துணற்கொடியும் பரவியதேனகம்

௧0. மல்லிகைமுதலாய் வாய்ந்தநன்மலரும்
சொல்லியதுளசீ சூழ்ந்தவனமும்

௧௧. மாமலர்பரவும் வராகபுஷ்கரணியும்
சுவாமிபுஷ்கரணியாந் தன்புனற்றடமும்

௧௨. பாண்டவதீர்த்தமும் பாபனுசனமும்
ஆண்டருள்கொடுக்கும் ஆகாயகங்கையும்

௧௩. அந்தரகங்கையும் அறமதுமிகுந்த
நந்தவனஞ்சூழ் ராமதீர்த்தமும்

௧௪. கிருமியதுவில்லாக் கிஷ்ணமாதீர்த்தம்
குமாரதாரா தீர்த்தமாங்குளமும்

௧௫. தோஷமேவிலக்குந் தும்புருதீர்த்தமும்
ஷேமாதீர்த்தம் தேமதீர்த்தமுமே

௧௬. வைகுண்டதீர்த்தம் வளசரசுவதியாம்
கைவலியச்சக்கிரக் காரணதீர்த்தமும்

௧௭. இப்படிதீர்த்தம் ஏழுமாமலையில்
முப்பதிரட்டி இருமூன்றுகோடியே

௧௮. தீர்த்தமாமிதனைத் தெரிந்தமட்டுரைத்தேன்
மூர்த்தியாம்ஹரிசெய் முகூர்த்தமுமுறைப்பேன்

௧௯. ஷேமாமலையில் சேவடிபதித்தார்
பாஷ்யநரசிம்ம பதியுமாயுதித்தார்

௨0. ஆதிவராக ஹரியவர்தானே
தீதில்லாவந்த க்ஷேத்திரபாலகரே

௨௧. பாண்டவர்தன்னைப் பாதுகாத்தவரை
யாண்டவரெனவே யமைந்தவர்ஹரியே

௨௨ வெங்கடேசுவரராய் மேதினியோர்க்குச்
சங்கடம்விலக்குந் தயாநிதியெனவே

௨௩. மூலமாஞ்சீனி மாஸமூர்த்தியுமே
ஆலிலைதுயிலும் ஹரியவர்கண்டீர்

௨௪. உச்சிவசீனி வாஸராம்வருவார்
உயர்ந்திடுங்கொலுசீனிவாஸருமாவார்

௨௫. மெச்சிடும்போக சீனிவாஸருமாய்
விமானமேர்சீனி வாஸருமிவரே

௨௬. தேவருமுனிவருஞ் செகத்துளவரசரும்
யாவரும்பரவும் ஆதிநாராயணன்

௨௭. ஆகாசராஜன் அழகுள்ளமகளை
விவாகமேசெய்துவந்தகோபாலன்

உஅ கட்டளைப்படிதன் காணிக்கைகுறையில்
வட்டியிட்டுடனே வாங்குமர்மூர்த்தி
உகூ திருவாய்மொழிக்கிச் செவியதுகொடுப்பான்
ஹரியெனபணிவோர் அகமதையெடுப்பான்
ஙo. அலர்மேலுமங்கா அம்பாசமேதன்
பலசுரர்பணியும் பங்கயப்பாதன்
ஙக. சொர்னமாமலையான் சொர்னமண்டபத்தான்
சொர்னகோபுரத்தான் சொர்னதீர்த்தத்தான்
ஙஉ. அற்புதமகிமை யளவிடக்கூடாத்
திருப்பதிதன்னைச் சிந்தையுற்றுதித்தே
ஙங. தருமசிலையுமவள் தனையனும்பதியும்
அருமையாம்மாமி யவள்பெருங்கணவனும்
ஙச. ஐவரும்வந்தார் ஹரிஹரியென்றார்
செய்வதுயினிமேற் செப்பிடக்கேளும்

(கக) தரு-சவுருஷ்டி-அடதாளசாப்பு.

கண்டார்வேங்கடகிரியனை இந்தக்
காசினிவரவும்உல்லாசமானவளைக் கண்டார்

ஸ்ரீபூமிதேவிநாயகனை நாளுந்
தீனரக்ஷகதிவ்யக் ஞானதாயகனை
ஸ்ரீவச்சதேவமாதவனை மூன்று
ஜகத்தையும்வளர்க்குந்திரு மூர்த்தியாதவனைக் கண்டார்

மாணிக்கமகுடமஸ்தகனை முத்தின்
வடமொடுகடக்கேயூர் ஹஸ்தகனை
வேணுவின்காணப்பிரியனை தன்னை
வேண்டிமறந்தால்விடாதவைரியனை கண்டார்

ஆகாசராஜபூசிதனை மிகு
அழகார்பத்மாவதி யனையும்போஷிதனை
பாகவதற்காள்பகவனைப் பூமி
பாரத்தைச்சுமந்து ரக்ஷிக்கும்பகவனை கண்டார்

காமிதபலங்கொண்டு பலனைவில்லுங்
கதைவாளசக்கிரங் கரத்தெடுப்பவனை
சுவாமிபுஷ்கரணியுள்ளவனைப் பல
தாசர்களாடச்சந்தோஷமுள்ளவனை கண்டார்

தாமரைக்கண்ணனென்பவனைத் துளசி
சாளிக்கிருமஹாரத்தைத் தரித்திலங்குவனை
மாமறைப் பொருளாய்வந் தவனை-பத்தர்
மனதிற்குடியிருந்து வாரங்கன்தந்தவளைக் கண்டார்

௬. பக்ஷிவாகனனைப் பாவனனை இந்தப்
பாரோடியளந்த பாதபங்கஜனை
லக்ஷமிவேங்கடனாராயணனை இந்த
நேரிழைமகன்றன்னை நேருங்காரணனைக் (கண்டார்)

(உ௪) விருத்தம்.

மாமியாற்றொட்டிற்சேயும்மகுணன் பொற்பதுமைதானும்
மாமனார்நிம்பபத்திரம் வைத்தடிவணக்கினார்கள்
தேமொழிதருடீசிலை சிறுவனையிடையில்வைத்துத்
தாமிகவணங்கிநின்றாள் தனையனைக்கொடுத்திலாளே.

(உ0) தரு-ராகம்-சங்கராபரணம்-அடதாளசாப்பு.

பல்லவி.

காணிக்கைசெலுத்தினார் பாரு அந்தக்
காரிகைதவிரமற்ற யாரும்

அநுபல்லவி.

வேணுகானஸ்ரீ வேங்கடரமணர்கண்
காணவெதிரென்று கனகப்பதுமையென்னு (காணிக்கை)

க. பொன்னின்றொட்டிலுஞ்சேயுங் கொடுத்தார் மையிற்
பூண்டவேப்பிலைத் தீனை விடுத்தார்
பன்னகசயனனைப் பணிந்துபணிந்தடுத்தார்
பிறுத்தனைசெலுத்தினேம் பாருமென்னத்தொடுத்தார் ()

உ. பத்தினியாள்சொன்ன சொல்லை யங்கே
பகர்ந்தனளோசற்று மில்லை
மற்றவருடனந்த மங்கையும்வணங்கினாள்
வங்தொருதடத்திலே வசிக்கவுமிணங்கினாள் காணிக்

ந. ஐயர்முதலுள்ள ஆசாரியர் நாளுஞ்
செழிக்குமஹாந்தா வதிகாரர்
மாயனைதெரிசிக்க வாருமெனவேசொல்ல
வந்துதொழுதாரந்த வைபவமென்னசொல்லக் காணிக்

(உரு) விருத்தம்.

மடந்தையுமகனுமங்கோர் மடந்தனில்வசித்தாரப்போ
தடந்த்தர்பிசியுலோண மாகியரதமுமன்று
திடமுறவலங்கரித்தார் தேன்மொழிமீதுதேவர்
ஊடமிகவிளைத்துக்கொண்டு ஹரியுமேரதத்தில்வந்தார்.

(உக) தரு ராகம் ஆரபி தாளம் திருபுடை.

ரதத்திலேரினரே-சதுர்வித பதத்தில்மீரினரே

அநுபல்லவி. [வே

சத்தம் அடியவர்பதத்தைத் துதிசெய்து தமிழின்வேதத்தைப்பாட
ஸஹஸ்ரநாமமும்புகழ்ந்துபுகழ்ந் தரிதாசர்களுங் கொண்டாடவே

க. பூரிபேரிநகாரிதுந்துமி புணரியெனவதிற் சொலிக்கவே
புகலும்நாகசுரஞ்சகலவாத்தியம்புதுமையெனவுமுற் பலிக்கவே
பாரிவரசர்மு ராரியெனவந்து பரவிகரத்தையஞ்ச லிக்கவே
பகரும்வேங்கடகிரி நாயகன்பாதசேவையும்பலிக்கவே (ரதத)

உ. ரத்னமணிமுடிமஸ்தகத்தினில் நிலவுகதிரெனத் தயங்கவே
நிகரில்பலபலசகலபூஷணம் நிறைந்தவுடுவென மயங்கவே
பத்தர்தனது கரத்தின்சாமறை பரவியடிக்கடிக் கியங்கவே
பாசமகற்றிபதாசராடியே பாடநாரதர் தியங்கவே(ரதத்தி)

ங. தாசர்கூட்டமும்ராஜர்கூட்டமும்சகலஜனங்களும்பெருக்கவே
தருணமென ஹரிசரணந்தரிசனந்தனக்குதருபவர்னெருக்கவே
ஸ்ரீனது ஆவேசங்கொண்டுசிலஜனங்கள் நடித்துக்கொண்டிருக்க
ஸ்ரீனிவாசருநாநாவலங்கிருதசித்ரரதத்தில்வந்திருக்கவே(ரத)

ச. குடைகள்சிலர்மலர் தொடைகள்சிலர்பலபடைகள்சிலர்பெயர்
கொண்டுவருகவே பலபலவிருதுமடியவர் கொண்டுஹரியிடம்
பெருகவே கடலினிடைதுயிலுடைய ஹரியெனக்கனிந்தெவ
ருமன்பினுருகவேகருணைவேங்கடரமணன் றேறிற்காக்ஷியெவ
ருக்குந் தருகவே. (ரதத்தி)

(உரு) விருத்தம்.

ஹரிரதாரோஹணம் தானரைப்போ
தாசர்களும் அடியவரும் அளவில்லாத
பிரியமுடன்கற்பூர தீபங்காட்டிப்
பேருலகோர்சேவித்துப்பெருமையாகப்
பரிவட்டஞ்சந்தனமும் பலருங்கொண்டு
பார்த்திபத் தேங்காயுடைத்து பரவித்தொண்டு
புரிவரும் பூசுரரும் வடத்தைக்கையிற்
பூண்டிட்டார் ரதம்நடக்கவேண்டிட்டாரே.

(உஉ) ராகம் மோஹனம் தாளம் ஆதி.

பல்லவி.

ரதமோடி வருகுதுபார் அதிசயமாகவே
வேங்கடேசரும் நீதமாயதின்மீதுலாவவே

அநுபல்லவி.

விதவிதமாயலங் கிருதமதுகூடியே
பதிவிருதையினிட சுதனையுந்தேடியே (ரதமோடி)

க. ஹரிதாசர்வடம் பிடித்தே
அடிக்கடி நடித்தே ஹரிஹரியென்று
ஆவல்தீரவே சேவைசெய்து
பிரியாமற்றுதி படித்தே பெருமையாகத்
திரைகடலொளியென முரசுகிடுகிடென
அரிவைமகனையென தடியிற்கொடுகொடென (ரதமோடி)

உ. சதுர்வேதம்முழங்கிடவே
கிருததீபஞ்சூழவே மறையவர் தன்னைத்
தாத்திமித்தாத்திமித் தாத்திம்மெனமிதித்
தாடிப்புளங்கிடவே விருதுகள்சூழ
வீரியடால்குடை சூரியபானொளி
மீறியமகுடசிங் காரமுடனே (ரதமோடி)

௩. மலர்மாரிசுரர்பொழியத்
திருவாயின்மொழியால் வந்தடியவர்
வாழ்த்திவேங்கடமூர்த்திகீர்த்தி வல
வீதிநல்வழியால் கோசாய்மடமுனே
வந்தொருதந்திர விந்தைபுரிந்திட
அந்தணர்வந்து பணிந்து தெரிந்திட (ரதமோடி)

(உஎ) விருத்தம்.

கோசாய்மடத்தின்மு னுல்லாசரதம்வந்துஅதிக
குதூரமுடனே நிற்கவும்
ராஜாதிராஜரும் பூசுரரனேகரும்
அவ்விடமெடுததிழுக்கத்
தாசர்களுல்லாசமோடு சன்னைகள்மிதிக்கவும்
சற்றுமசை விண்டுநிற்க
ஈசாயிதென்னவித மென்றுபெரியோர்களிவை
செப்புவா ரொப்புவாரே.

(உரு) தரு-இராகம்-பைரவி-தாளம்-திரிபுடை.

பல்லவி.

கோபமென்னசொல்வாய்தேவா தேர்நடக்காத
கொள்கைசொல் மஹாநுபாவா

அநுபல்லவி.

பூவாள்வளரும்மார்பா புகழ்வேங்கடப்பிரதாபா (கோப)

சரணங்கள்.

க. வேந்தர்குறைசெய்தாரோ வேதாகமந்தெரிந்த
வேதியர்குறைசெய்தாரோ ஓதேவனேவேதியர்
சாந்தவைசியர்குறையோ சரணமதிற்பிறந்த
தரணிமக்கள்செய்யுங்குறையோ
பாந்தநல்லடியார்கள் பத்திக்குறைவுமுண்டோ
பணிவிடைக்குறைதானுண்டோ
ஏன்தானிப்படிவந்த தெளியோர்களும்வருந்தக் (கோப)

உ. பாலவிருத்தர்களெல்லாம் பசியாற்பரதவிக்கப்
பாப்பதழகோதேவனே ஓதேவனேபார்ப்ப
மூலஸ்ரீனிவாச மூர்த்திபூசையும்நிற்க
முறையோமாதவபூபனே
மேலேவெய்யலில்நின்று வேந்தர்களும் வருந்த
விதியோபதுமநாபனே
பாலரழியசயனனே பதுமநன்னயனே (கோப)

௩. சூத்திரம்பிடிக்காமற் சூத்திரப்பிடித்தோமே
சூத்திரதாரிநீயேகபடநாடக சூத்திரதாரிநீயே
பிரார்த்தனைக்குறைவுண்டோ பாவிகளெவருண்டோ
பாகவதர்செய்பிழையுண்டோ ஓதேவனே
பிரீதனேயெவர்மேலே பிழையுண்டோஉன்கையாலே
பிடிக்கமாட்டாயோமாவே ஓதேவ
கீர்த்திமருவும்வேங்க டாத்திரிவளர்மூர்த்தியே (கோப)

(உஅ) விருத்தம்.

வேதியரெவருமிந்த விதத்தினிற்றுதிகள்செய்து
நீதிசேர்வேங்கடேச நித்தனைவணங்கும்போது
ஆதிநாரணனுமங்கோ ரந்தணன்றனதுமேலே
ஏதமிலாமருளோநன்றாய்க் கூட்டிநராட்டினரே.

உச தரு-இராகம்-கமாஸ் தாளம்ஆதி.

பல்லவி.

ஸ்ரீ சனது ஆவேசங்கொண்டவர் நடித்தார்
திருப்பதிவேங்கடரமண ஸ்ரீ சனது

அநுபல்லவி.

பாசமலும்ஹரி தாசர் நடுவிலொரு
கேசரிபோலேவுல் லாசமாகவே ஸ்ரீ சனது

க. சிந்தைமகிழவா னந்தநிர்த்தனமிடுவார்
திருதிகெனவெரியும்நெய்ப்
பந்தங்களையுடலந்தனிற்புனைந்திடுவார்
அந்தணரெவரையும் பிந்தவிலக்கிக்கொண்டு
கந்தனுடனிருந்த காரிதனைக்கண்டு ஸ்ரீ சனது

உ. வாருமிவள்தனைப் பாருமெனவேபிடிப்பார்இந்த
மடந்தையைமகனுடன்
சேரப்பிடித்துத்தன் தேரினிடம்வந்துநடிப்பார்
கோரினபடியேகு மாரனை வண்டியில்
ஆருமறியத்தந்தால்த் தேரும்நடக்குமென்று ஸ்ரீ சனது

ஙு. நாலுபேரிந்தப் பாலனைவரங்கேட்டார்இந்த
நாரிதவிரஅவ
ராலேசொன்னது போலஅடியில்நீட்ட
நாலெட்டுவயதிலிப் பாலன்படைத்தாய்வண்டிக்
காலிக்கிடுவேனென்று ஜாலம்செய்கிறுளென்று ஸ்ரீ சனது

உரு விருத்தம்.

ஸ்ரீ சனுவேசங்கொண்டோர் செப்பிடத்தெளிந்தங்குள்ள
பூசுரரனேகர்வந்து பூவையைமறித்துக்கொண்டு
தோஷிநீசொன்னவாறு சுதனைவண்டியிலேதந்து
ஈசனைவணங்கிப்போவேன் றேசுவார்பேசுவாரே.

(உறு) தரு-இராகம்-கமாஸ்-மோஹனம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ஈசனுனைவிடுவேனோ வெங்கடகிரி
வாசனுனைவிடுவேனோ
கூசாமற்பிள்ளையைக் கொடுப்பதாகச்சொல்லி
கூசினல்விடுவனோ கொடுகொடென்கல்வி

க. இப்படியேனெண்ணினாய் பிள்ளையைப்பெற்று
சற்பனையேன்பண்ணினாய்
கற்புடையவளே நீ கவலையேன்படுகிறாய்
இப்புதல்வனைக்கையில் இனியேன்வைத்திருக்கிறாய் (ஈச)

உ. மூடவன் ஹரியைவேண்டினான் குதிரையிற்பொன்
முடிப்புடன்வரத்தாண்டினான்
வடவன்றனைநீயந்தப் பணத்தைப்பறிப்பையென்றான் [றான்
முடவன்றொடரப்பொன்னின் முடிப்பைக்கொண்டவன்சென்

ரு. கிழவிநெய்தரச்சாற்றினாள் காசாண்டிநெய்
முழுதும்விள்ளக்கிட்டேற்றினாள்
கழுவாதுகிச்சடி காபாண்டியினிற்செய்தாள்
அழிவில்மண்டபத்திற்கண் டவளும்பல்லினைக்கெய்தாள் (ஈச)

ச. கோரும்வரத்தைக்கொடுப்பான் தன்காணிக்கை
குறையில்வட்டியிட் டெடுப்பான்
நாரியேவுனதுகு மாரனை விடுவானோ
மீறினாலுனைவட்டி சேரவென்றிடுவானோ (ஈச)

ரு. ஆறும் அறியமாட்டாரே நீகோரின
தரிந்து ஹரியுங்கேட்டாரே
வாரிஜா ஹனுங்கிருபை வைத்தாலின்னம்பெறுவாய்
கோரினபடியேகு மாரன்றனைத்தருவாய் (ஈச)

(ருய) விருத்தம்.

இப்படிமறையோர்சொல்ல வேந்திழைகணவன்மாமி
மைப்பொலிகுழலினாளை மைந்தனைவளைந்துகொண்டு
வெப்புறுந்தழலில்வெண்ணெய் விழுதல்போலுருகிவாடி
எப்படியினிமேலென்று இடிக்கின்றார்துடிக்கின்றாரே.

(உரு) தரு-இராகம்-உசேனு-அடதாளச்சாப்பு.

பல்லவி.

ஏதடி இப்படி-எண்ணினாய் நீதான்
எப்போதுபிரார்த்தனை பண்ணினாய்

அநுபல்லவி.

நாதனும் அறியாமல் நவில்வதுந்தெரியாமல்
தீதென்றுங்குறியாமல் சிறுக்கியாய்த்திரியாமல் (ஏதடி)

க. பாவிநீசொன்னதைப் பண்ணடீ கோ
பாலனை வேண்டின தென்னடீ இந்தத்
தேவன்தேர்வண்டியின் முன்னடீ உந்தன்
செல்வனைக்கேட்கிறீர் தென்னடீ
ஆவலால்நாங்களோர் மூவரும் வேண்டின
தல்லாமற்பிள்ளையைக் கொல்ல நீவேண்டின (எதடி)

உ. பிள்ளையைக்கொல்வது தன்மமோ அடி
பேயேவுனக்குப்பெண் ஜன்மமோ சும்மா
உள்ளதைசொல்லென்ன வர்மமோ உந்தன்
உள்ளவினையால்வந்த கன்மமோ
எள்ளளவாகிலும் எங்களையோர் பேச்சு
விள்ளாமலல்லோ விபரீதம் வரலாச்சு (எதடி)

ந. தங்கப்பதுமையுந் தொட்டிலும் பசி
தாழ்ந்திடவேப்பிலை மட்டிலும் தின்று
மங்களமாம்ஸ்ரீனி வாசனைக் கண்டு
வந்தித்துத்தந்தோமுன் போசனை
எங்களுக்கொன்றுந் தெரியாமற்போச்சுது
மங்கையேநாமு மயங்கிடாச்சுது (எதடி)

(நக) விருத்தம்.

கணவனும்மாமனுருங் கவலையேமிகுந்துகேட்க
குணமிகுந்தருமைசீலைக் கோதையுங்குளிர்ந்துநின்று
மணமகன்றனையுமாமன் மாமியார்தனையும்பார்த்து
இணைக்கயல்விழியினளு மியம்புவாளியம்புவாளே.

(உஎ) தரு-ராகம்-காம்போதி-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

என்னநான்சொல்லுவேனெந்தன்பிரார்த்தனை பிராணநாதா-வேங்க
டேசனைப்பிள்ளையினசையால் வேண்டினேன் பிராணநாதா
முன்னமோரந்தணன் அன்னமுண்கேனென்று பிராணநாதா-உங்கள்
முன்னவர்சொன்னது மென்னமறந்தேதோ பிராணநாதா
பிள்ளையில்லார்க்குப் பெருநரகென்றுரே பிராணநாதா-அந்தப்
பேச்சுக்காய்நானொருபேச்சுநினைத்தது பிராணநாதா
விள்ளவென்றாலும் மிகமனம்வாடுதே பிராணநாதா-இந்த
மேதினிதன்னில்மாபாதகியாகினேன் பிராணநாதா

பெற்றவளென்றுவுறைத்தால்போதும்யென்றுபிராணநாதா-நான்
பேதமையாகினை தோதினேனோர்மொழி பிராணநாதா
கர்த்தனும்வேங்கட காரணன்றேரினிதிற் பிராணநாதா-வண்டிக்
காலுக்குத்தந்திடப்பாலனை வேண்டினேன் பிராணநாதா
தப்பாமற்கெர்ப்பந்தரிததிடக்கண்டனென் பிராணநாதா-பிள்ளை
தான்பிறந்திட்டபின் நான்மறந்தேனதைப் பிராணநாதா
சொப்பனங்கண்டது துக்கமிருந்தது பிராணநாதா-அதைச்
சொன்னல்லைவவீரென்றுன்னியிருந்தேநான் பிராணநாதா
அப்புறம்நானரி பொற்பதம் வேண்டினேன் பிராணநாதா-வய
தைந்து அளவும்நிச் சிந்தையதாகினேன் பிராணநாதா
அப்பன்வயிறு வலிப்பதைக்கண்டோமே பிராணநாதா-நான்
யாத்திரைவந்தபின் பார்த்ததிலேயேவலி பிராணநாதா
பிரார்த்தனைநீங்கள் செலுத்துமளவுமே பிராணநாதா-எந்தன்
பிரார்த்தனையெப்படிச் சேர்த்திடுவோமென்றுபிராணநாதா
தோத்திரஞ்செய்தரி கீர்த்தனம்பாடினேன் பிராணநாதா-ஹரி
க்ஷாத்திரமாகவே தேர்த்தொழிபூண்டனர் பிராணநாதா
கண்டுபிடித்தென்னைக்கண்டிதஞ்செய்கிறர் பிராணநாதா-ஹரி
கற்பனைதானினியெப்படியோயெந்தன் பிராணநாதா
மண்டலத்தில்வசை கொண்டவையாகினேன் பிராணநாதா-எந்தன்
மைந்தனையெப்படிதந்திடுவேனையா பிராணநாதா
பெண்புத்தியாலேபிழைமோசம்போனேனே பிராணநாதா-இந்தப்
பேச்சுமகத்தான யேச்சுக்குள்ளாகினேன் பிராணநாதா
கண்மணிபாலன்செய்புண்ணியமென்னமோ பிராணநாதா-மிகு
காரணன்வேங்கட நாரணனே துணை பிராணநாதா

(கூஉ) விருத்தம்.

பத்தினிசொல்லச்சொல்லப் பிராணநாயகனுந்தன்னைப்
பெற்றதாய்தந்தையாரும் பின்னுமுள்ளவருங்கேட்டுப்
புத்திரன்றன்னைக்கொல்லப் பூண்பரோவிரதமென்று
பெத்ததாயலப்பேயென்று பேசுவாரேசுவாரே.

தரு-ராகம்-செஞ்சுருட்டி-அடதாளசாப்பு.

பல்லவி.

ஏண்டியிப்படிநீதான் வேண்டினாய்பாவி
ஏண்டியிப்படிநீதான்

அநுபல்லவி.

வேண்டினையேயிப்படி விபரீதமாகித்
தூண்டிபோல்னையே சுதனுக்குத்துரோகி (ஏண்டி)

௧. பெற்றமகன்சுகமாயுற்றால்சந் தோஷம்
மற்றதற்கிடர்செய்தால் மகத்தான தோஷம் ஏண்டி
தானேபாலடையார்க்குத் தந்தபால் மேலே
பூனைகுடிக்குமென்ற புதுமையைப் போலே ஏண்டி
புத்தாம்நரகுறுமற் பெற்றதே அருமை
ஹத்திசெய்தால்நரகமனந்தமாய் வருமே ஏண்டி
ஆருவருஷமாய்நீயாருடன் சொன்னாய்
தேரிடஞ்சென்றுதெருவிலே நின்றாய் ஏண்டி
தேஞ்சாலிலமுதமாய்க் காஞ்சாவுந் தானே
தாஞ்சாமருந்துண்பாரோ தரணியில் மானே ஏண்டி
சேயைப்பெற்றபுண்ணியத் தாயென்றறிந் தோமே
மாயன்பேர்சொல்லியமோசப்பேயென்றறிந் தோமே ஏண்டி
வஞ்சகிவுனைப்போலே பிரபஞ்சத்திலார் சொல்லாய்
பஞ்சமாபாதகிஉந்தன் னெஞ்சமென்ன கல்லா ஏண்டி
ஏதடிவேண்டினாய்குலை பாதகமி தல்லவோ
பாதகிவுன்னையேகொன்றிப்போதுநாங்கள் சொல்லவோ ஏண்
சற்றுமெம்மையோசியாமல் மெத்தநீ சண்டாளி
முற்றுமகனுக்குறைத்தால் குற்றமல்லோ நீலி ஏண்டி
ஒருமுப்பதின்மேற்பிள்ளை மருவிக் கட்டினையே
இரிகிப்பிச்சையெடுத்து அருகிற் கொட்டினையே ஏண்டி
வண்டியினில்மகனைக் கைகொண்டுதருவாயோ அக்கா
வண்டியினியெப்படிமனங்கொண்டு வருவாயோ ஏண்டி
ஸ்ரீனிவாசனைவேண்டித்திருப்பிக்கொள் சுதனை
மாநிலந்துதிக்குமுன்னைமடந்தை கேளிதனை ஏண்டி

(௲௲) விருத்தம்.

பதியொடுமாமன்மாமி பலபலஜனங்கள்யாரும்
விதவிதமாகப்பேசி மெல்லியைவையும்போது
சுதனைநீவண்டிக்கிப்போ துருசுடன்தருவையென்று [ரே.
முதுமறையோர்கள்யாரும் மொழிந்திட்டார் மொழிந்திட்டா

(௨௯) தருராகம்-அடாணா-தாளம்-ரூபகச்சாப்பு.

பல்லவி.

போதும்போக்கலேதுவிள்ளடீ உந்தன்
புத்திரனைத்தேர்சக் கரத்திற்றள்ளடீ

அநுபல்லவி.

பாதகிநீயென்ன தோகஞ்செய்கிறாய்
ஸ்ரீதரன்பாதத்தை போதினாலுய்கிறாய் போது

தேரிங்கேநின்று என்னேரம் உனைக்கண்டு
தேடிப்பிடித்தாரே நீயுங்
கோரினகோரிக்கை யாருந்தெரிந்திடக்
கூறிப்படித்தாரே என்ன
காரியம்நீசும்மா நேரஞ்செய்யாதே கு
மாரனைவண்டியிற் றூராய்நீவாராய் போது
சொன்னசொல்மாருவ தென்னமகத்தான
தோஷம்அறியாயோ முன்பு
மன்னரிச்சந்திரன் தன்னிடதேவிக்கு
வந்ததறியாயோ
அன்னத்துடன்மகன் றன்னைக்கறிசெய்
தரனுற்கருளுந் திரங்கேட்டிலாயோநீ போது
ஈசனிரதம் நிலைநின்றுபோஜனம்
எங்களுக்கேவிரதம் ஸ்ரீநி
வாசனுக்கோர்கால பூசையுன்னாலே
பழுவிலென்னசுகிர்தம்
நேசமாய்சொல்லிய ஸ்ரீசனுடமைக்கு
ஆசையினாலேகி லேசப்பட்டேன்சும்மா போது

(உச) விருத்தம்.

போதும்போக்காதேயுந்தன் புதல்வனைக்கொடுப்பாயென்று
வேதியவொருமிந்த மெல்லியையைவையும்போது
காதலன் றன்னைப்பார்த்துக் கண்கணீர்சொரியவார்த்து
ஸ்ரீதராமுகுந்தாவென்று தேம்பிநின்றியம்புவாளே.

(௯௦) தரு-ராகம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி

பல்லவி.

என்னசெய்வேன் ஹரியே மைந்தனைக்கோ
றென்னைநீயா தரியே

அநுபல்லவி.

என்னமோபேதைநான் சொன்னதேவர்க்குங்குரோதம்
ஏழைமீதிலேஉனக்கித்தனைபிடிவாதம் என்ன
மகனையெப்படிக்கொடுப்பேன் என்வீட்டார்முன்
வந்துஎப்படியடுப்பேன்
வெகுநாடபிள்ளையில்லாமல் மெலிந்துபெற்றெடுத்தேனே
பகவானேஉனதுதேர்ப்பலிக்கென்றுஅடுத்தேனே என்ன

உ. பக்தவச்சலனல்லவோ பாறையும்பெண்ணு
யுற்றதுன்பதத்தல்லவோ
பெற்றநான்சொன்ன விபரத்தைநீதீராயோ
புத்திரன்மேல்கிருபை வைத்துநீகாராயோ (என்ன)

ரு. கவலேமிகத்தருவதே மைந்தனைக்கண்டால்
கண்ணீராறாய்ப் பெருகுதே
அவசரப்படிற்புத்தி தவறுமென்பதுபொய்யோ
அடியாள்மேலிப்படி அடஞ்செய்கிறீரையய்யோ (என்ன)

ச. சொன்னபடியேமகனே இதோவந்து
நின்றான்லோகரக்ஷகனே
முன்னொருவரந்தா யெந்தன்குக்ஷிக்காயே
இன்னொருவரமெந்தன் றன்னைரக்ஷிப்பாயே (என்ன)

ரு. ஈசாவுனையேநம்பினேன் வேங்கடகிரி
வாசாஉனையேநம்பினேன்
ஆசையுடனேநானன்றுவேண்டிக்கொண்டேன்
மோசஞ்செய்யாதேயின்று முன்னேவேண்டிக்கொண்டேன்

(ருரு) வஞ்சித்துறை.

மாதுநீசும்மா போதுபோக்காதே
ஸ்ரீதரனுக்கிப் போதுதாசுதனை

(ருசு) விருத்தம்.

மறையவருரையுந்தாய்சொல் வார்த்தையுங்கேட்டுப்பாலன்
விரையுடனம்மாயென்ன விதமிதுவென்றுங்கேட்கச்
சிறுவனேஉனக்குநானித் தேவனைவேண்டாமாயன்
உரைப்படிகேட்டானென்னு முரைக்குரைஉரைக்கின்றனே.

(ருக) வது-தரு-இராகம்-காம்போதி-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

க. என்னநீவேண்டின தின்னமுறைத்திடா யன்னையே வேங்க
டேசன்பிரார்த்தனை பேசினதென்னசொல்லன்னையே

உ. உன்னைப்பெறுமுன்னஞ்சொன்னபிரார்த்தனை மைந்தனே
அதுசொன்னாலெவர்களும் நன்றாகவேசுவார்கந்தனே

ரு. அப்படிச்சொன்னதிற் றப்பிதமுண்டோசொல்லன்னையே
இப்போதுஎன்னிடஞ் செப்பிடுவாயெந்தன் அன்னையே

௪. முப்பதின்மேலிந்த சர்ப்பகிரீசனை மைந்தனே உன்னைக்
கெர்ப்பித்துப்பெற்றிடச் செப்பினதொன்றுண்டு கந்தனே

௫. கோரினபிரார்த்தனைப் பேரென்னசொல்லுவாயன்னையே
அதைகொடுக்காமலேன்சும்மாய் தடுமாறுகறுயெந் தன்னையே

௬. தேரின்வண்டிக்குக் குமாராஉனைத்தரக்கோரினேன் அதை
நேரால்கொடுக்கவி சாரமுடனேபால்மாறினேன்

௭. கொடுத்ததைக்கேட்கில் அடுத்ததுபகையென்று அன்னையே
நீயுங்கூசியேநீமனக் கிலேசப்படலாமோ அன்னையே

௮. எடுத்துமுலையுண் கொடுத்துவளர்த்தயென்பாலனே வுனை
யெப்படிதேர்வண்டிக் கொப்பிப்பதப்பாவென்பாலனே

௯. சொன்னசொல்மாறுவதென்னமகத்தானதோஷமே அந்தத்
தூயநுடைமைக்கு நீயமூதாலென்ன பூஷமே

௰. உன்னைக்கொடுப்பதற் கென்னமனம்வருமைந்தனே எந்த
ஊருஞ்சிரிக்கவேதூறுக்குள்ளானேனே கந்தனே

௰௧. மாயனைவேண்டி அநியாயஞ்செய்வார்களோ அன்னையே
ஊரின்வாய்மூட யாருக்குச்சாயும் அதைச்சொல்லாயன்னையே

௰௨ தாயென்றுகூப்பிடுவாயேஉனைத்தந்து வாடவோ யாருஞ்
சீயென்றும்பேயென்றும் ஆபாசமாஞ்சொல்லைத்தேடவோ

௧௩. நேயமாயெந்தனை மாயன்பதைத்திடுவாயே அந்த
நித்தன்வர்த்தின்னம் புத்திரனைப்பெறுவாயே

௧௪. தாயின்முலையின்னம் நீயும்மறந்தில்லைமைந்தனே உயர்
சாதுக்கள்வார்த்தைகள் ஓதத்தெரிந்ததோ கந்தனே

(௫௭) விருத்தம்.

தாயொடுமகனுமிந்தத் தத்துவமுறைத்துத்தன்னை
மாயனார்பதத்திலின்று மகிழ்வுடன் தருணவயென்று
வாயினார்சொல்லுமிந்த மழலைதன்வார்த்தைகேட்டுச்
சேயனேஉனக்கேதிந்தத் திடமெனயடந்தைசொல்வாள்.

(௫௨) வது-தரு-ராகம்-கெண்டா-தாளம்-ரூபகசாப்பு.

பல்லவி.

இந்தத்துணிவுவந்ததேதடா எந்தன்கண்ணின்மணியே
மைந்தனேகிட்டவந்து ஓதடா

அநுபல்லவி.

எந்தன்வயிற்றில்வந்து பிறந்தையே பாவியாமென்
இன்றுவிடுவோமென்று மறந்தையே

க. முலைக்குடிமறக்கிலையேகந்தனே இந்தயானவார்த்தைவிடுத்து
மொழியவெப்படித் தெளிந்தாய்கந்தனே

உ. கலத்திலன்னத்தைகலக்கி ஊட்டென்பாய்தொட்டில்தனில்
கனியப்பாடிஎனைநீ யாட்டென்பாய்

ங. அப்பிச்சிகொடுப்பாயென்றலறிடுவாய்என்னையம்மாவென்று
அடிக்கடிமுலை குடிக்கமலட்டுவாய்

ச. பற்பலவிளையாட்டுமோடுவாய் சிலபாலருடனே
பரிந்துசண்டைபுரிந்துகூடுவாய்

ரு. அப்பனிடத்தென்றப்பிதஞ்சொல்வையேஅவரென்னையதட்டி
அடிக்கமனது மடிக்குட்புல்வையே

சு. செப்புமழலைவார்த்தைக்கிள்ளையே வேங்கடேசருன்னைத்
தேடிப்பிடித்தாரென்னகொள்ளையே

எ. அஞ்சுவயதின்பிஞ்சுமதியமே உனக்கிந்தயான
அறிவுகிடைத்தலரியினுதயமே

அ. பஞ்சபாதகியென்செய்வேன்மகனே உனைத்தேரிற்கொடுத்து
பார்ப்பேனோபழி யேற்பேனோமகனே

கூ. அப்பனேயெனதையனே உனைத்தேரிற்கொடுத்து
ஆறவோமனந்தேறவோமகனே

ய. சொர்ப்பனங்கண்டபோதேதெரிந்தேனே சுதனேஉனக்குத்
துரோகியிவளென் றுகித்திரிந்தேனே

யக. அன்னையெனவென்முன்னேவருவையே உனைவா யெடுத்து
அணைத்திடையிலிணைக்கப்பெறுவையே

கஉ. பன்னகேசரத்தினடியிலே உனைகொடுக்கமனது
பாயுமோஅநியாயம்படியிலேஇந்தத்துணிவு

(ஙஅ) வஞ்சித்துறை.

அழுதுநீசும்மா பொழுதுபோக்காதே
குழவியைக்கொடுத்துத் தொழுதுநீபோடி

(௩௩) வது-தரு-இ-ம்-செஞ்சுருட்டி-அட தாளச்சாப்பு.

பல்லவி.

அழாதேசும்மாவாடி யுந்தன்
அழுதுமகனை வண்டி யடியினிற்றுடி- (அழா)

அநுபல்லவி.

பழிகாரிநீசும்மாபோடி எண்ணிப்
பாராமல்என்வேண்டினுய்நீ நிர்மூடி. (அழா)

சரணங்கள்.

௧. எடுக்காதசுமையையேநீ யெடுத்தாய் தலைக்
கெடுத்தல்நெற்றிக்கேறக்கை விடுத்தாய்
படுக்காளியெனவேபே ரெடுத்தாய் பிள்ளைப்
பாலைக்காச்சிப்பூனைபகருவேன் கொடுத்தாய் (அழா)

௨. ஒருவனுடன்மெள்ள நழுகிறுய் இங்கே
சிணுங்கிச்சிணுங்கிச்சும்மா திண்ணைமெழுகிறுய்
உரகசயனனைத் தொழுகுறுய் நீயும்
உரலிற்றலையிட்டோங்கும் உலக்கைகழுகிறுய் (அழா)

௩. வண்டிக்கிடுவேனென்று பேசி இங்கே
வந்துகொடுக்கப்பால்மாறுறுய் கூசி
சண்டியாயிருக்கிறுய் சீசீ இனித்
தாளாதுமகன்றனைத்தருவாய்நீ தோஷி (அழா)

(௩௪) வது-தரு-ராகம்-தன்னியாசி-தாளம்-ஆதி

பல்லவி.

ஹரியேயென்னசெய்வேன் வேங்கடகிரி
ஹரியேயென்னசெய்தான்

அநுபல்லவி.

சிறுவனைக்கொடுத்தாயே செலுத்தெனத்தடுத்தாயே
பரதவிக்கிறேனிப்போபாதகிநானேதுசெய்வேன் ஸ்ரீதரனே

௧. நானேபழிகாரி மைந்தனுக்கென்
றேனோர்மொழிகூறத் தேனியான துநன்றுய்
சேர்த்துக்கொடுப்பதுபோ லானேனுமிப்போது
ஆரணனே-நாரணனே-பூரணனே (ஹரியே)

உ. மகனையெப்படியெடுப்பேன் ஐயய்யோதேரின்
வண்டிக்கெப்படிகொடுப்பேன் ஜகத்திலவர்தான்பெற்ற
செல்வனைக்கொடுப்பார்கள் வகையறியாமற்போனேன்
மச்சவனே கச்சபனே அச்சுதனே (ஹரி)

௩. சிறுவன்றனைவிடுவாய் அதற்கென்மேலுன்
றேர்நீநடத்திடுவாய் அரிவைநானிதோவண்டி-
யடியிற்படுத்திடுறேன் கருணைகொடுத்தருளுங்
கருப்பதியே மருட்பதியே திருப்பதிவாழ் (ஹரி)

(௩௩) விருத்தம்

வெண்ணெய்கைநழுவித்தீயில் விழுந்திடில்மிஞ்சுமோதான்
அண்ணலேயுனக்குச்சொன்ன அரியபிரார்த்தனைக்கிப்போது
எண்ணமிட்டென்னசெய்வேன் எனதுமேலிரதமோட்டிக்
கண்மணிபாலன்றன்னைக் காரெனநாரிசொல்வாள்.

(௩௫) வது-தரு-ராகம்-அசாவேரி-அடதாளசாப்பு.

பல்லவி.

கந்தனைக்கேட்காதே யெந்தனைக்கொடுக்கிறேன்
கருணைசெய்வாய் (ஹரியே)

அநுபல்லவி.

ஐந்துவருஷமொன்றும் அறியாதசேயனைத்
தந்துயிர்தரிப்பேனோ தயைநீசெய்யாமாயனே (கந்த)

க. முந்திக்கொடுத்ததைப் பிந்திக்கேட்பாரிந்த
மூவுலகிலுமில்லையே ஆண்டோர்
மும்பதில்நான்சொன்ன தப்பிதப்பிரார்த்தனை
மூட்டுமொப்பில்லையே நானும்
வந்தியாயின்ன மிருந்தாலுமித்தனை
வாதைக்கிடமுமில்லையே அய்யா
மாயனேநீமுன்சஹாயஞ்செய்திப்போ
வழக்கிடலென்தொல்லையே புல
அந்தணர்வநதேனையடுக்கிறார் அவர்
ஆளுக்கோர்சொல்லாகத்தொடுக்கிறார் பெற்ற
கந்தனைக்கையிலே யெடுக்கிறார்வண்டிக்
காலுக்குத்தாங்களே கொடுக்கிறார்களாம் (கந்த)

உ. கைப்பிடித்தென்னைக் கலருப்புருஷன்
கனிந்துறவாடுவானோ யெந்தக்
காலமுந்தொண்டுநானை சொல்லுமாமியைக்
கண்டுதள்ளாடுவேனோ வேத
விற்பனவாமனர் வேண்டும்பணிவிடை
வேலைக்குத்தேடுவானோ இந்த
மேதினியோர்மஹா பாதகியென்றே
விளம்பிடவாடுவேனோ எந்தன்
அப்பன்மகனைக் கேளாதே என்னை
யாகிலுந்தாரேனிப் போதே நல்ல
சர்ப்பகிரியிதின் மீதே யேதுஞ்
சற்பனைசெய்ய லாகாதேசாமி(கந்த)

ங. எத்தனையானாலும் புத்திரனுக்கிடர்
யார்தான்செய்து சகிப்பாரையா னை உ
எண்ணியேநற்றுதி பண்ணியபேர்கட்
கிடர்செய்தால்யார்சுகிப்பாரைய்யா லோக
கர்த்தனுக்கும்நீயே பத்தருக்கிரங்கிடும்
காரணம்யெவர் வகிப்பாரையா யாவுங்
காப்பவனுனையன்றி வேறுண்டெனச்சொல்லிக்
காட்டியெவர் ஜயிப்பாரையா என்மேல்
சித்திரத்தேர்தன்னை யோடுட்டுவாய் எந்தன்
செல்வன்மேல்நீகிருபை சூட்டுலாய் புகழ்
எத்திசைக்கும்நிலை காட்டுவாய் வெங்க
டேசனென்றெங்கும்பா ராட்டுவாய் சாமி (கந்த)

(௬௰) வஞ்சித்துறை பிராமணர் சொல்வது.

தண்ணீரெனவே நண்ணியபேருக்
கெண்ணேயோதருவாய் பெண்ணேநீசொல்வாய்

(௬௧) தரு-ராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

வாடாகண்மணியே உனைத்தேரின்
வண்டியிற்கொடுக்கிறேன் சண்டாளியெடுக்கிறேன் (வாடா)

அநுபல்லவி.

வாடாலுருமுத்தந் தாடாதேர்மிசைச்
சேஷாசலனுடனே கூடநீவிளையாட (வாடா)

சு. அப்பாகண்மணியே உனைநித்தம்
ஆதாரவாய்வளர்த்துப்பாதகியானேனே அப்பா
சொற்பமாய்வேண்டினு லொப்பாறியென் றுன்னைக்
கற்பிக்குமுன்வேண்டினதிப்போ செலுத்துமுன்னே (வா)

உ. நானுபழிகாரிஉனைநித்தம் நன்றாகவேவளர்த்துக்
கொன்றிடவேவிளைத்த நானுபழிகாரி
கூனியாய்முளைத்தேனே ஹானியாய்விளைத்தேனே
மானிலத்தோர்கைகொட்ட தேனீயாகினேனகிட்ட (வா)

ந. தொட்டிலிட்டாடினேனே உனைதேர்வண்டிக்
கிட்டவெள்ளாட்டிநானே அப்பாதொட்டி
இஷ்டமகனேவுனை விட்டிங்கேயடுத்திட்டேன்
கிட்டமற்றொருவண்டிக் கெட்டநான்படுத்திட்டேன் (வா)

(சுக) விருத்தம்.

மறைபவர்வையவிந்த மடந்தையுமகனைத்தாவி
ஹரிதிருரதத்தின்வண்டி யருகினில்வந்துநின்று
குருசுடனித்திற்பெற்ற சுதனையும்படுக்கவைத்து
மருவலவண்டிதன்னில் வந்துதான்படுத்திட்டாளே.

(கூள-வது) தரு-ராகம்-ஆனந்தபைரவி- அடதாளசாப்பு.

பல்லவி.

ஹரியேநீவருவாய் உன்பிரார்த்தனை
யானதைப்பெறுவாய்

அநுபல்லவி.

பெருமையுடனெனக்கோர் பிள்ளைநீகொடுத்தாயே
பேதையேதாசொன்ன பேச்சாலெடுத்தாயே
பிரியமுடனென் தருமமகன்மிசை
யிரதம்நடத்துவை வரதவெங்கட (ஹரி)

சரணங்கள்.

க. முப்பதின்மேலே பிள்ளையைப்பெற்ற
னப்பாவுன்றாலே
அப்புதல்வனையுனக் கொப்பிப்பேனெனுஞ்சொல்லை
மெப்பித்துக்கேட்கிறுப் தப்பிதமுனக்கில்லை
விதனமெனக்கென்ன சுதனையுனக்கென்ன
மதியில்நினைத்ததே சதியாய்முடிந்தது (ஹரி)

௨. மைந்தனைக்கொடுத்தேன் நானும்மறு
வண்டியிற்படுத்தேன்
ஐந்துவருஷமாய்நான் தந்திடாதிருந்ததுக்
கெந்தனைவட்டியாயிந்தாமுகுந்தனே
இரதமதையதிதுரிதமுடனெம
திருவர்மிசையிலுய்வாவு நடத்திக்கொண்டு (ஹரி)

௩. ஹரியேஉன்பாதம் வணங்கத்தந்
தருளும்பிரசாதம்
சிறுவனைத்தேரிலே செலுத்தெனப்பிடிவாதஞ்
செய்திரென்னையுங்கூடச் சேர்க்கில்மிகவினோதம்
தீனரக்ஷக ஞானரக்ஷக
ஸ்ரீனிவாசஜ நார்த்தனோத்தம(ஹரி)

௪. மகவரங்கொடுத்தாய் ஹடஞ்செய்தின்று
வாங்கியேவிடுத்தாய்
லகுவாயின்னொருவரம் நீகொடுத்திடுமெய்யா
நெடுந்தேர்கனத்திடாமல் நீநடத்திடுமெய்யா
நீலமேகவி சாலதேஹனே
நீரஜாக்ஷகம் பீரவேங்கட(ஹரி)

(௪௨) விருத்தம்.

அங்கனுசணியுமிவ்வா றரிதிருச்சரணத்தியானம்
பொங்கமாய்ச்செய்துபெற்ற புதல்வனுந்தானுமாக
அங்குளரதத்தின்வண்டி யடிதனிற்படுத்தாளப்போ
வேங்கடரமணன்தேரை விடுத்திட்டார்நடத்திட்டாரே.

(௩௮-வது) தரு-ராகம்-தன்னியாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

அதிசயமிதுவதிசயமெனவோத

அநுபல்லவி.

பதிவிருதையும்ஹரிபதத்துதிபாடவும்
பாரிலுள்ளபலபத்தர்கொண்டாடவும் (அதிசய)

சரணங்கள்.

௧. தோத்திரஞ்செயுமிவள் வார்த்தையைக்கேட்டுச்சந்
தோஷம்பனதில் காட்டிஅதி
துரிதமுடனேயிரதத் திருமகனையெடுக்குந்
தோகையெனக்கை நீட்டிப்

பார்த்திடும்படவி மகனையெனகாட்டிடப்
பார்ப்பதெனவேதலை யணைகள்முன்பாட்டிட (அதிசய)
உ. மடந்தையொருவண்டியில் மகனொருவண்டியில்
வந்துஅவர்படுக்கவே சதுர்
மறையவர்விரைவொடு ஹரியேவருவையென
வடத்தைக்கையிலெக் கவே
சரிசரியினியிதோ வருகிறோமெனச்சொல்லி
தலையசைக்குதெனத் தரணியேவரும்புல்லி(அதிசய)
ங. அசையுதரதமினி விசைகொடுவிழுமென
அரசரட்டிவரவே மிகு
புஜவலியுடையவர் கஜமுடன்சன்னிடைப்
பூட்டித்தள்ளிக்கொண் டுறவே
புஜகசயனன்செய்த புதுமைநரனென்னசொல்லத்
திருஜகமகிழுமந்தத்தேரும் பின்னுக்குச்செல்ல(அதிசய)

(சக) விருத்தம்.

கந்தார்த்தம்-இ-ம்-மோகனம்.

தேர்பின்னடந்ததிது யாருந்தெரிந்திதென
தேவாவெனப்பாவியே
நேருஞ்சிரங்கள்மிசை தோருங்கரங்கள்கூவுப்ப்
பாரும்நிறைந்தரிஹரி
கூரு'ஞ்செடா துகிருப தாரும்உமக்கென்ன
கோபம்எனப் பரவியெல்
லோருமமணங்கமஹ மேருந்திருப்பியதென்
றிரதம்நடந்துவருதே.

(நகரு) தரு-ராகம்-மோகனம்-அடதாளசாப்பு.

பல்லவி.

இரதம்நடந்துவருவதே தர்மசீலையின்
விரதம்முடிந்துவருவதே

அநுபல்லவி.

இரதம்நடத்துமய்யா வரதவேங்கடேசப்பா
ஹரியேயெனவும்நல்ல பெரியோர்களுமேசொல்ல (இரதம்)

சச-விருத்தம்-கந்தார்த்தம்.

அடமேவினைத்திர்த மடவாளுடன்மகனை
யணிதேரின்வண்டியடியில்

வளர்வேங்கடாசல மஹாமூர்த்திவாங்கியபின்
மனதுசந்தோஷமாகி
வடமேபிடித்தவர்கள் நடமேபிடித்திட்டம்
மருள்தந்துபின்னகர்ந்து
குடமாமுலைச்சியொடு குமரன்றனைத்தாண்டி
குதித்துஇரதம்நடந்ததே.

பல்லவி.

குதித்தோரதம்நடந்ததே அவர்மேல்தாரை
பதித்தோதங்கடந்ததே

அநுபல்லவி.

குதித்தோரதம்நடக்க மதித்தேதேவருங்கண்டு
துதித்தார்புஷ்பவருஷம் எதிர்த்தார்சந்தோஷங்கொண்டு (குதித்தே)

சரு-விருத்தம்-கந்தார்த்தம்.

ஹரிதாசர்பிரியாத திருநாமநேமபஜனை
யவர்செயுங்கோஷமொருபால்
ஸ்வரதாளமேளமின் னரிமத்தளங்களொடு
சுருதிகீதகோஷமொருபால்
பெரிதானபேரியெக் காளைபூரிநகாரி
பிரியாதகோஷமொருபால்
குரைசொழியெனவதிர கோவிந்தனிரதமது
குடுகுடெனவேநடந்ததே.

(சக-வது)தரு-ராகம்-மோகனம்-அடதாளசாப்பு.

பல்லவி.

குடுகுடெனநடந்ததே தாயைமகனே
யெடுயெடெனக்கடந்ததே

அநுபல்லவி.

குடுகுடெனநடந்து எடுஎடெனக்கடந்து
திடுதிடெனப்புகன்று நெடுவீதிதனிற்சென்று (குடுகு)

௪௬-விருத்தம்-கந்தார்த்தம்.

சண்டமாருதமுட னிருண்டமேகங்கள்பல
 சார்ந்ததெனவேதாணியோர்
கண்டவர்வருண்டிடவே வண்டிகளுருண்டுவரு
 காரணமிருந்தூளிகள்
எண்டிசைகளும்நிறைய வண்டர்களெலாம்பரிய
 வெவருமிவர்மகிமைதெரியத்
தண்ணேவணிந்திடுவை குண்டநிரதம்நிலையிற்
 றானேதழைபச்சென்றதே.

(௪௨-வது) தரு-இ-ம்-மோஹனம்-அடதாளசாப்பு.

பல்லவி.

தானேநகழைச்சென்றதே ரதந்தனக்குத்
தானேநிலையில் நின்றதே

அநுபல்லவி.

ஞானசூரியனுகய மானதெவர்க்குமங்கே
வானோர்புஷ்பவருஷந் தானேசொரிந்தாரங்கே (தானே)

(௪௭) விருத்தம்-கந்தார்த்தம்.

திருவேங்கடேசனிறு தேர்வந்துநிலைநின்ற
 செயலறிந்தார்ஜகமுளோரர்
ஒருமாதுபெருசாது சிறுபாலனிவர்மீது
 உயர்தேர்நடந்தபடியால்
வருபோதவர்கள்செய்தி தெரியாதெனச்சகல
 மானுஷோத்தமர்தேடவே
மருவேதுமில்லது சிறுவனுடனேயழகு
 மயிலாளெழுந்துவருவாள்.

(௪௩-வது) தரு-ராகம்-மோஹனம்-அடதாளசாப்பு.

பல்லவி.

மயிலாள்எழுந்துவருவாள் மைந்தனைக்கட்டி
மார்போடணைத்துப் பெருவாள்

அநுபல்லவி.

அயிலார்விழியாள்மாயன் அருளைப்புகழ்ந்துபாடி
இயலாயினதுணைப்பெற்று யெடுத்தேனெனக்கொண்டாடி (மயி)

(சஅ) விருத்தம்.

பாலனேஉனைநானிந்தப் பதுமனுப்ன்தேர்வண்டிக்
காலிலேதந்தேனன்றோ கண்மணிமகனேயென்தன்
பாலிலேருணக்குப்பக்ஷம் பரியுடனுளதோவென்று
சாலவேமகனைநன்றாய்ச் சாற்றுவாள்தேற்றுவாளே.

(சச-வது) தரு-இ-ம்-மோகனம்-அடதாளசாப்பு.

பல்லவி.

அப்பனேவாடா கண்மணியேநீ
யப்பனேவாடா

அநுபல்லவி.

அப்பனேவுனைநானே சர்ப்பனைசெய்தேனே
தற்புத்திபதித்தவென் கெர்ப்பத்திலுதித்தவென (அப்பனே)

சரணங்கள்.

க. வண்டிக்காலிலேஉன்னைக் கொண்டுபோய்க்கொடுத்தேனே
சண்டாளியெனவேபேர் கொண்டுவந்தெடுத்தேனே (அப்பனே)

உ. அன்னையெனவேகிட்ட நின்றாயேயுனதிஷ்டப்
பன்னகேசன்றந்திட்ட பொன்னேநான்வளர்த்திட்ட (அப்பனே)

ந. பெற்றவனுனைக்கொல்லப் பேய்போலேஅடுத்தேனே
பக்தவச்சலன்கிருபை பார்த்துப்பெறெடுத்தேனே (அப்பனே)

ச. கன்னஞ்சிவளென்றென்னைக் காட்டினர்ஹரிதானே
என்னுடனுனைப்பெற்ற தின்றிந்தகிரிதானே (அப்பனே)

ரு. ஸ்ரீநிவாஸனைமறந்தேன் முன்புசிக்ஷித்தார்
மாநிலந்துதிக்கவே மைந்தாநம்மைரக்ஷித்தார் (அப்பனே)

(சகூ) விருத்தம்.

மைந்தனையிடையில்வைத்து மாமயில்தருமசீலை
வந்துமாதவனைவாழ்த்தி மணவாளன்மாமன்மாமி
முந்தவேமூர்ச்சையான மூவரையெழுப்பவென்று
வந்தனைசெய்துபின்னும் வசனிப்பாள்பஜனிப்பாளே.

(௬௫-வது) தரு-ராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

துணைவாராய் ஹரியே
கருணைதாராய்

அநுபல்லவி.

மணமிகுதுளசி மார்பசிங்கார
பணிமலையுடையபஞ் சாயுதசூர

சரணங்கள்.

௧. பங்கஜநயனா பன்னகசயனா
வெங்கடரமணவி னோதசல்வயனா
மங்களதேஹா வளரும்வைபோகா
எங்கனும்வளர்ந்திடும் ஏகவனேகா (துணை)

௨. ஹரிநாராயண துரிதநிவாரண
கரிமுறையிடவந்துகாத்தருண்மாயா
சிறியனிடத்தருள் செய்துசந்ததியைப்
பிரியமுடன்கொடுத்தருள் பெருகுஞ்சஹாயா (துணை)

௩. சுதனைவுனதுதிரு ரதத்தின்வண்டியிற்றா
மதனமாய்வேண்டின முதலைச்செலுத்தெதென்றன்னை
விதனப்படுத்திட மதனையெமதிருவர்
முதுகிபடத்தியவச் சுதனேமாதவனே (துணை)

௪. பயத்தைக்கொடுத்துப்பின்னப் பயத்தைக்கெடுத்துடன்
அபயத்தைக்கொடுத்துப்பாதம்பயத்தைக்கொடுப்பவனே
நயத்திலுனையன்பரி தயத்திற்றுதிக்கநேசுவா
ரியத்தைக்கொடுத்தருளும் நித்தியமூர்த்தி (துணை)

௫. வாசவனெறிசுரர் பூசனைபுரிந்திடும்
ஈசனேதிருப்பதி வாசவிலாசனே
தாசர்கள்துதித்திடும் நேசனே அதிகவுல்
லாசனேஹரிஸ்ரீநி வாசன்நீதானே (துணை)

(௬௬) விருத்தம்.

பதிவிரதைஹரியைப்போற்றிப் பாவியேன்றுய்போது
முதுமறைபவன்றுப்தந்தை மூவரும்மூர்ச்சைநீங்கிச்
சுதனெனுடன்தாயைக்காணத் தருவியேவருதுமபோது
நிதிகிடைத்ததுபோற்கண்டு நேசித்தார்பார்த்தாரே.

உ. மகனைப்பெற்றெடுத்தாய் தேர்வண்டியில்
வைத்துநீகடுத்தாய்
இகத்திற்கொடுக்குந்தெய்வ மிவரென்றறியத்தான்
ஈசன்றேரிருவர்மே லெளியகடத்தினனே (பதி)

ங. இந்தநற்கதையைப் படித்துக்கேட்போர்க்
கெவர்தான்சமதையே
சிந்ததிதனதானிய சம்பத்துக்கள்தருவார்
சாமிவேங்கடேசன் றனதுபதந்தருவார் (பதி)

(ருச) விருத்தம்.

பூசுரரெலருமிந்தப் பூவையைப்புதல்வனைப்பார்த்
தாசிகன்சொன்னாப்போ தந்தணன்றகப்பன்தாயார்
மாசிலாத்தா நசீலை மைந்தனுமாகக்கூடி
ஸ்ரீசனைவலமாய்வந்து திருநகர்சேர்ந்தாரன்றே.

(சகூ-வது)ராகம்-பூபாளம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ஈசனைத்துதித்தாரே வேங்கடகிரி
வாசனைத்துதித்தாரே

அநுபல்லவி.

ஈசனைவைகுண்ட வாசனைபக்தர்கள்
நேசனையுளர்ஸ்ரீநி வாசனைப்பணிந்துக்கொண்டு (ஈச)

சரணங்கள்.

க. தீர்த்தமெவையுமாடினார் ஹரியைவந்து
சேவித்துக்கொண்டாடினார் ஹரிநாமசக்
கீர்த்தனமதைப்பாடினார் வலமாகக்
கிரியைச்சுற்றியேகூடினார்
கீர்த்திமருவும்வேங்க டாத்திரிதனிலேவந்து
க்ஷேத்திரமாகுஞ் சேஷாத்திரிதனிலேவந்து (ஈச)

உ. ஏழுமலையைத்துதித்தே கோவிந்தராஜர்
இருக்கும்பட்டணமதித்தே அங்கேயொரு
நாள்முழுதும்சித்தே அலர்மேலு
நாயகிதாள்கதித்தே விளங்கிடும்
வாழ்விழிபவயனையும் வந்திப்பணிந்தாரே
நாளும்செழிக்கும்பாக நகரில்நன்கணிந்தாரே (ஈச)

௩. தந்திருப்பதியடுத்தார் மறையோர்க்கன்ன
தானமிகவும்கொடுத்தார் யாத்திரைசெய்த
விந்தையெவையுமுரைத்தார் தருபசீலை
வேண்டல்சொல்லியநிறைத்தார்
செந்திருமருவுங்கோ விந்தன்க்ருணையாலே
வந்தோமெனவேசொல்லி மகிழ்ச்சியுடன்மென்மேலே (௪௭)

(௫௫) விருத்தம்.

ஊரிலுள்ளவருந்தங்க ளுறவினரெவருமித்த
நாரியைப்புகழ்ந்துநீதான் நவின்றதுய்நளினநாபன்
மீரியுங்கனோரக்ஷித்த விதமிதுவெல்லாய்நீவி
ஸ்தாரமாயுரைப்பாயென்னத் தருபசீலையுஞ்சொல்வாளே.

(௫௬) வது-தரு-ராகம்-சௌராஷ்டிரம்-அடதாளசாப்பு.

பல்லவி.

என்னசொல்வேனந்தப் பன்னகேசன்கிருபை
தன்னைப்பெரியோர்களே

அநுபல்லவி.

என்னசொல்வேனவர் தன்னைநான்வேண்டலை
நன்றுகெடுக்குமோ சொன்னலடக்குமோ (என்)

சரணங்கள்.

௧. மைந்தனில்லாமல் வருந்தியெனக்கு
வயதொருமுப்பதுமாச்சு அனே
வற்றநதிகள்ஸ்தலங்கள் தெய்வங்களை
வந்தனெசெய்வதென்னவாச்சு யாருந்
சந்தியில்லையென் றெந்தனைக்கண்டவர்
சடையாய்ப்பேசவுமாச்சு ஒரு
ஸத்புருஷன் அன்ன தானத்தைக்கொள்ளாமல்
சாற்றியதாலந்தப்பேச்சு என்னை
வந்தியென்றே யுலகந்தனிற்சொல்வதை
மாற்றவொருநினைப்பாச்சு ஹரி
மலரடிபோற்றிடலாச்சு மனதொடு
மைந்தன்நீதரிலோ ரதசக்

கிர்தனக்கிடுவே னெனச்சப
தர்தனை சொல்வோ ஹரியருள
தந்தாரப்பொழுதே அதிசயப்(என்)

உ. என்னைமணந்தவர் பொன்னின்பதுமைமயை
ஈகுவெனென்றயர்கூறினர் அவர்
இஷ்டமிருந்ததை வேப்பிலையைத்தின்று
ஈசனைககண்டிடக்கோரினர் அமர்
பன்னியுந்தொட்டிற் குழவிந்தந்து
பரவேனுமென்றுதேரினர் என்தன
பிரார்த்தனைவேங்கட மூர்த்தியறிந்தொரு
பாலன்தந்தார்வயிற்றாறினன் பிறந்
தன்னன்மகனைத்தொ டுப்பாயென்றெந்தன்
அருங்கணவில்வந்துதூறினர் மாத
மாச்சுப்பத்தென்றுறை மீறினர்கணவினை
யென்னவென்றெளியேன் இவரோடு
சொன்னவின்றிடுவேன் ஹரிபதந்
தன்னையேதொழுதேன் ஹரிகிருபை
பின்னுமப்பொழுதே தந்தனர்(என்)

ங. மைந்தன் அழகுகுணமுமதுர்ந்தந்த
மாயனைநான்மெத்தமறந்தேன் ஐந்து
வச்சரமாக வயிறுவலிகொண்டு
மகன் அழுநான்பரப்பறந்தேன் பல
அந்தணர்சொல்ல வறிந்துபத்தியொடு
யாத்திரைசெய்யவுஞ்சிறந்தேன் ஹரிக்
கற்பிதமாயவர் செப்பினதைத்தா
யான்கொடுக்காமலேகரந்தேன் ஹரி
வந்தணர்தேரிலே நின்றனரப்போ
மறையோர்துதிக்கமெய்மறந்தேன் அருள்
வந்தோர்பிடிக்கவுமிருந்தேன் குமரனை
வண்டியிற்கொடுத்தேன் நான்மறு
வண்டியிற்படுத்தேன் ரதம்மலர்
செண்டுபோலவுமே நடத்தினர்
அண்டர்நாயகனே இன்னமும்(என்)

(நிசு) விருத்தம்.

உறவினரெவர்க்குமிவ்வா ரேூதியதருமசிலைச்
சிறுவனும்பதியும்நன்றாய்ச் செல்வமேமிகுந்துவாழ்ந்தார்
ஹரிகதையதனைப்பாரில் அறிந்தவர்கேட்டபேர்கள்
சருவசௌக்கியம்பெற்றுத் தாணியில்வாழ்கமாதோ.

வாழி.

(நிஎ) விருத்தம்.

ஸ்ரீதரன்வாழிவாழி திருப்பதிமலையும்வாழி
மாதெனுக்கருப சிலை மைந்தனும்பதியும்வாழி
வேதியன்சுப்பராயன் விளம்பியதமிழின்வண்டிக்
காதையைப்படிப்போர்கேட்போர் கருத்துடன்பதித்தோர்வாழி.

---

பாயிரத்தில் அச்சிட்டிருக்கும் மங்களத்தை
பாடிக்கொள்ளவும்.

ஸ்ரீவேங்கடேசுவராய மங்களம்.

---

திருப்பதி வேங்கடேசுவரர்

தேர்வண்டிக்கால் சரித்திரக்கீர்த்தனம் முற்றிற்று.

| | |
|---|---|
| விருத்தம் | ருஎ |
| தருக்கள் | ரு௰ |

பாயிரத்தில்

| | | |
|---|---|---|
| | விருத்தம் | கரு |
| | தருக்கள் | கஅ |
| ஆ௳ | விருத்தம் | எ௰ |
| ஆ௳ | பாவினம் | கருஅ |

---